பக்கங்கள்:-பத்து
Registered as a News paper in Sri Lanka
விலை ரூபா. 6.00

மாநகராட்சி மன்ற
யாழ்ப்பாணம்

# வலம்புரி
Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஐப்பசி 11 | செவ்வாய்க்கிழமை | (28.10.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 313

# ஜனாதிபதி அனுப்பிய கடிதத்தால்
# ரெலிவ்சன் மீது நடவடிக்கை!

## நோர்வேப் பிரதமர், வெளிவிவகார அமைச்சருக்கு உத்தரவு

(கொழும்பு)

**யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் றிட்ஜ்வே ரெலிவ்சனின் யுத்த நிறுத்தக் கண்காணிப்புத் தொடர்பான நடவடிக்கைகள் குறித்து முக்கிய கவனம் செலுத்துமாறு நோர்வேப் பிரதமர் தனது வெளிவிவகார அமைச்சருக்கு உத்தரவு விடுத்துள்ளார்.**

முல்லைத்தீவுக் கடற்பிரதேசத்தில் விடுதலைப் புலிகளினுடைய ஆயுதக் கப்பல் விவகாரம் தொடர்பாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலிவ்சனின் நடவடிக்கைகள் குறித்து நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நோர்வேப் பிரதமரை கடிதம் மூலம் கோரியதையடுத்தே நோர்வேப் பிரதமர் தனது வெளிநாட்டு அமைச்சருக்கு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக நோர்வேப் பிரதமர் ஜனாதிபதியின் கடிதத்திற்குப் பதில் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

நோர்வேப் பிரதமர் அனுப்பி வைத்துள்ள பதில் கடிதத்தில் ஜனாதிபதியினால் இம் மாதம் 23-ம் திகதி அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தை ஆழமாகப் பரிசீலித்து வருவதாகவும், இது தொடர்பான விடயங்களில் முக்கிய கவனம் செலுத்துமாறு தனது வெளிவிவகார அமைச்சருக்கு பணிப்பு விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலிவ்சனின் நடவடிக்கைகள் குறித்து கடற்படைத் தளபதியிடம் ஜனாதிபதி கோரிய அறிக்கையில், ரெலிவ்சனின் நடவடிக்கைகள் இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்குமென்று எச்சரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-5)

## கூட்டணி உறுப்பினர் பதவியை
# துரைராஜசிங்கம் எம்.பி. இராஜினாமாச் செய்தார்!

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழு உறுப்பினரும், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான துரைராஜசிங்கம் கட்சி உறுப்பினர் பதவியில் இருந்து நேற்று இராஜினாமாச் செய்துள்ளார்.

அவர் தனது இராஜினாமாத் தொடர்பாகக் கட்சியின் செயலாளருக்கு நேற்று தொலை நகல் ஒன்றை அனுப்பியுள்ளார்.

எம்.பியின் இராஜினாமாத் தொடர்பாக கட்சி வட்டாரங்களுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது இராஜினாமாத் தொடர்பாக தொலை நகல் ஒன்று நேற்றுக் கிடைக்கப் பெற்றதாகவும், எனினும் இராஜினாமாவுக்கான காரணம் எதுவும் அதில் குறிப்பிடப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரியை கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து உடனடியாக விலகுமாறும், அவ்வாறு தலைமைப் பதவியில் இருந்து விலகத் தவறும் பட்சத்தில் மத்திய செயற்குழுவைக் கூட்டி அவரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டுமெனவும். கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட செயற்குழு நேற்று முன்தினம் கூடித் தீர்மானம் நிறைவேற்றியது.

இவ்வாறு ஆனந்தசங்கரியைப் பதவி விலகுமாறு கோரி மட்டக்களப்பு மாவட்ட செயற்குழு எடுத்த தீர்மானத்தின் பின்னணியிலேயே இவர் தனது இராஜினாமாக் கடிதத்தைச் சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த)

# சமாதான முயற்சி வெற்றியளிக்க
# சகலரும் ஒத்துழைக்க வேண்டும்

## பதவியேற்பில் லெப்.ஜெனரல் பலகல்ல உரை



(கொழும்பு)

சமாதான முயற்சியின் வெற்றிக்கு பங்களிப்புச் செய்வது சகல தரப்பினரினதும் முக்கிய கடமையும் பொறுப்புமாகும் என லெப்ரினன் ஜெனரல் லயனல் பலகல்ல தெரிவித்துள்ளார்.

ஆயுதப் படைகளின் பிரதம தளபதியாக இராணுவத் தலைமையகத்தில் நேற்று பதவியேற்ற பின்பு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இறைமையையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதில் இராணுவத்தினரின் பங்களிப்புக் குறித்துஅவர் நன்றி தெரிவித்தார். அவரின் பதவி ஏற்பு வைபத்தில் முப்படையினரதும் அணி வகுப்பு மரியாதையும் இடம் பெற்றது. இதேவேளை 38 ஆண்டுகள் அவர் ஆற்றிய சேவைக்காக 'ரணவிக்கிரம', 'ரணசுர' ஆகிய பதக்கங்கள் வழங்கப்பட்டன.

இப்பதவி ஏற்பு வைபவத்தில் விமானப் படைத் தளபதி ஏயார் மார்ஷல் டொனால்ட் பெரேரா, பதில் கடற்படைத் தளபதி தஅட்மிரல் மொகான் விஜயவிக்கிர, பதில் பொலிஸ் மா அதிபர் இந்திரா டி சில்வா ஆகியோரும் கலந்து கொண்டனர். (ந-5)

## யாழ்.திருக்குடும்ப கன்னியர் மட வகுப்பறைக்குள் வெடி குண்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலையில் நேற்றையதினம் கைக்குண்டொன்று மீட்கப்பட்டு படையினரின் உதவியுடன் செயலிழக்கச் செய்யப்பட்டது. வெள்ளி, சனி,ஞாயிறு விடுமுறையின் பின் நேற்றைய தினம் காலை பாடசாலைக்குச் சென்ற மாணவிகள் வகுப்பறை ஒன்றினுள் இதனை அவதானித்ததாகவும், பின்னர் அதிபரிடம் முறையிட்டதன் பேரில் படையினரின் கண்ணி வெடியகற்றும் பிரிவின் துணையுடன் அவ்வெடிகுண்டு மீட்கப்பட்டு பாதுகாப்பான முறையில் செயலிழக்க வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இச் செய்தியால் பாடசாலையில் சிறிது நேரம் பரபரப்பு நிலவிய போதிலும், பின்னர் வழமை நிலைக்குத் திரும்பியது.(த-4,16)

# நாட்டின் தேசிய பாதுகாப்பில் கூடிய அதிகாரம் யாருக்கு!
## உயர் நீதிமன்றம் ஆராயும்

(கொழும்பு)

நாட்டின் தேசிய பாதுகாப்பு விடயத்தில் ஜனாதிபதிக்கா? பாதுகாப்பு அமைச்சருக்கா கூடியளவு அதிகாரம் உள்ளதென்பதை ஆராய்வதற்கு உயர் நீதிமன்றத்தின் ஐந்து நீதியரசர்களை பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா நியமித்துள்ளார்.

அரசியல் சாசனத்திற்கேற்ப நாட்டின் தேசிய பாதுகாப்பு விடயத்தில் ஜனாதிபதிக்காக அல்லது பாதுகாப்பு அமைச்சருக்கா கூடியளவு அதிகாரம் உள்ளதென்று ஜனாதிபதி விளக்கம் கோரியதையடுத்தே நீதியரசர்கள் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந் நீதியரசர்கள் குழு இவ்விடயம் தொடர்பாக எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆராயவுள்ளது. (வ)

# பாலியல் வல்லுறவை கண்டித்து மன்னாரில் மக்கள் மறியல்

(கிளிநொச்சி)

மன்னாரில் பொலிஸாரால் பெண் ஒருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டமை, மற்றொரு பெண்ணுடன் பாலியல் வல்லுறவு முயற்சியில் ஈடுபட்டமை போன்றவற்றைக் கண்டித்து உயிலங்குளம் இராணுவச் சோதனைச் சாவடிக்கு முன்பாக மக்கள் வீதிமறிப்புப் பேராட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார் வவுனியா வீதியில் நேற்றுக் காலை 9 மணியளவில் நடைபெற்ற இவ் வீதிமறிப்புப் போராட்டத்தில் சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

அடம்பன் மற்றும் மன்னார் நகரப் பகுதிகளில் இருந்து ஊர்வலமாக வந்த பெருந்திரளான மக்கள், பெண்கள் மீதான வன்முறைகளுகெதிராகக் கோஷமிட்டனர். பெண்கள் மீதான வன்முறையைக் கைவிடு, தமிழ்ப் பெண்களைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தாதே, குற்றவாளிகளை இனங்கண்டு சட்ட நடவடிக்கையெடு, பெண்களை நிம்மதியாக வாழ விடு போன்ற கோஷங்கள் வீதிமறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டோரால் எழுப்பப்பட்டது. (ந-5)

# போர் நிறுத்த உடன்பாட்டை படையினர் தொடர்ந்து பேணுவர்
## ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவிப்பு

(கொழும்பு)

ஆயுதப்படையினர், பொலிஸார், துணைப் படையினர், அதிரடிப்படையினர் ஆகியோர் நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் போர் நிறுத்த உடன்பாட்டைத் தொடர்ந்தும் பேணிவருவர் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலிவ்சனின் ஆலோசனைகளுக்கு செவிசாய்க்க வேண்டாமென ஜனாதிபதி படைத்தலைவர்களுக்கு பணித்துள்ள நிலையிலும் ஆயுதப் படையினர் கண்காணிப்பு குழுவினருடன் ஒத்துழைத்து வருகின்றனர் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினின் நடவடிக்கைகளும் சுமுகமாகவே நடைபெற்று வருகின்றன. அதேவேளை குழுவின் ஏனைய உறுப்பினர்களும் வழமை போன்றே செயற்பட்டு வருவதாகவும் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இராணுவத் தளபதியாகவிருந்த லெப்.கேணல் லயனல் பலகல்ல நேற்று முதல் கூட்டுப் படை நடவடிக்கைத் தலைமையதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-6)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பனைவள ஆராய்ச்சி நிறுவனத்தை புனரமைப்புச் செய்வது அவசியம்

**பனை தென்னைவள கருத்தமர்வில் துணைவேந்தர்**

(கிளிநொச்சி)

பனைவள ஆராய்ச்சி நிறுவனம் உடன் புனரமைப்புச் செய்யப்பட்டு, செயற்படுவதன் மூலமே பனைவள உற்பத்திகளில் நவீன தொழில் நுட்பங்களைப் புகுத்தி சர்வதேச தரத்திற்கு உயர்த்திக் கொள்ள முடியும்.

இவ்வாறு யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் வடமகாண பனை தென்னை வள கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையத்தால் நடாத்தப் பட்ட கருத்தமர்வில் தொகுப்புரையை ஆற்றும் போது தெரிவித்தார்.

கிளி.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற இவ் இருநாள் கருத்தமர்வில் அவர் மேலும் தெரிவிக்கையில், உலகில் 150மில்லியன் பனை மரங்கள் இருந்த போதும் 50மில்லியன் பனை மரங்கள் தமிழர்களிடம் உள்ளன இலங்கையில் 10 மில்லியனும், தமிழ் நாட்டில் 40 மில்லியனுமான பனை மரங்கள் காணப்படுகின்றன.

அன்று தொட்டு இன்று வரை பனம் உற்பத்திப் பொருள்களில் தொழில்நுட்பம் கையாளப்பட்டே வருகின்றது. ஆனால் இன்று நவீன தொழில் நுட்பம் பனை தென்னை உற்பத்தியில் உட்புகுத்தப்படல் வேண்டும்.இதற்கு ஆராய்ச்சியிலும் தொழில் நுட்பத்திலும் வளர்ச்சி காண வேண்டும். எனவேதான் பனை ஆராய்ச்சி நிலையத்தை உடன் ஆரம்பிக்க வேண்டும்.

மேலும் ஆராய்ச்சி உத்தியோகத்தர்களை நியமித்து செய்த ஆராய்ச்சிகளை நடை முறைப் படுத்தியும் புதிய ஆராய்ச்சிகளைத் தொடரவும் வழி செய்தல் வேண்டும். அதற்காக பல்கலைக் கழகம் உறுதுணை புரியும். அத்தோடு தென்னை ஆராய்ச்சி சபையும் உதவி புரியும். எனவே பனை அபிவிருத்தி சபை காலத்தின் தேவையறிந்து செயற்படவேண்டும்.

பனை, தென்னை வளம் சார்ந்த நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து ஒரு வருடத்தில் 3,4தடைவைகள் சந்தித்து கொள்கைகளை வகுத்து திட்டங்களை செயற்படுத்த உறுதிகொள்ள வேண்டும். பனை அபிவிருத்தி சபை, தென்னை அபிவிருத்தி சபை, பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்கள், பல்கலைக் கழகம், தமிழீழ நிர்வாகம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஆகியன ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டும்.

அதன் மூலம் பனை, தென்னை வள அபிவிருத்தி மேலோங்கும். இந் நிறுவனங்களின் முக்கிய உறுப்பினர்கள் இணைந்து இவ்விரு வளங்களையும் அபிவிருத்தி அடையச் செய்யும் ஆலோசனைச் சபையை உருவாக்க வேண்டும்.

தென்னை ஆராய்ச்சி சபையின் பிராந்திய நிறுவனம் ஒன்றை பளையில் அமைப்பதன் மூலம் தென்னை வளப் பயன்பாட்டை மேலோங்கச் செய்யமுடியும் என்றார். (உ)

## கூடைப்பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கியின் ஆதரவில் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் பாடசாலை மாணவர்களிடையே சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட்டு வரும் கூடைப்பந்துப் போட்டித் தொடரில் இன்று பி.ப 5.00 மணிக்கு மத்திய கல்லூரியின் பி அணியும் வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் மோதவுள்ளன. (உ-18)

# துன்புறுத்தலுக்கு ஆளாகும் பெண்கள் முறையிடலாம்

(கொழும்பு)

பெண்கள் துன்புறுத்தப்படுவது தொடர்பாக விசாரணை செய்வதற்கென புதிய திட்டமொன்றை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

அதற்கமைய மகளிர் விவகார அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது இதன்படி துன்புறுதல்கள் மற்றும் குற்றச் செயல்களினால் பெரிதும் பாதிக்கப்பட்ட பெண்கள் இக் குழுவிற்கு நேரடியாகத் தங்களது முறைப்பாடுகளை சமர்பிக்கமுடியும் எனத்தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகளை சட்டத்தரணிகள் குழு பிரிசீலனை செய்யும்.

இதனைத் தொடந்து பொருத்தமான நிவாரணங்களை வழங்குவதற்கு அமைச்சு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது.

இவ்வாறான முயற்சிகளின் மூலம் பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்பதுடன் பாதிக்கப்பட்ட பெண்கள் எந்தவித தயக்கமின்றி முறைப்பாடுகளைச் செய்ய முன்வருமாறு இந்த விசேட குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. (உ-60;10)

## திரைப்பட விழாவில் இலங்கை பங்கேற்கிறது

(கொழும்பு)

கொல்கொத்தாவில் அடுத்த மாதம் 10ஆம் திகதி நடைபெறவிருக்கும் சர்வதேச திரைப்பட விழாவில் இலங்கையில் தயாரிக்கப்பட்டுள்ள திரைப்படங்களும் இடம்பெறவுள்ளன. 'திபு கழுவற' 'திபு செபனலி' ஆகிய திரைப்படங்களே போட்டிக்காக தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (உ-60,10)

## ரமழான் சிந்தனை

ரமழான் மாதம் எத்தகையது என்றால், அதில்தான் மனிதர்களுக்கு வழிகாட்டியாகவும், நேர்வழியிலிருந்து(ள்ள) தெளிவுகளாகவும், (சத்திய அசத்தியத்தைப்) பிரித்துக் காட்டக் கூடியதாகவும் உள்ள இந்தக் குர்ஆன் இறக்கியருளப்பட்டுள்ளது. ஆகவே உங்களில் எவர் அம் மாதத்தை பெறுகிறாரோ அவர், அதில் நோன்பு நோற்று விடவும், எவரேனும், நோயாளியாகவோ அல்லது பிரயாணத்திலோ இருந்தால் மற்றநாட்களில் (ஏற்கனவே விடுபட்ட நோன்பினை) எண்ணி (நோற்று) விடவும் அல்லாஹ் உங்களுக்கு இலகுவை நாடுகிறான். மேலும் அவன் உங்களுக்கு சிரமத்தை நாடவில்லை. மேலும் (நோன்பின்) எண்ணிக்கையை நீங்கள் பூர்த்தி செய்வதற்காகவும், அல்லாஹ்வை உங்களுக்கு அவன் நேர்வழி காட்டியதற்காக நீங்கள் பெருமைப்படுத்துவதற்காகவும், நீங்கள் (அல்லாஹ்வுக்கு) நன்றி செலுத்துவதற்காகவுமே இச் சலுகைகளை உங்களுக்கு அல்லாஹ் வழங்கியுள்ளான்..

ஆதாரம்- (அல்குர்ஆன் 2:185)

தகவல்: மக்கள் பணிமனை


## யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் - இலங்கை
## கலைப்பீடப் பரீட்சைகள் - 2002/2003

**கலைப்பீடத்தின் கீழே குறிப்பிடப்படும் பரீட்சைகள் பின்வரும் திகதிகளில் ஆரம்பமாகின்றன.**

01) முதலாம் வருட இரண்டாம் அரையாண்டு பரீட்சைகள் 2002/2003, 2002/2003(A) -03.11.2003

02) இரண்டாம், மூன்றாம், நான்காம் வருட இரண்டாம் அரையாண்டு செயன்முறைப் பரீட்சைகள் - சித்திரமும் வடிவமைப்பும் -03.11.2003

03) முதலாம் வருட இரண்டாம் அரையாண்டு செய்முறைப் பரீட்சைகள் - இசை, நடனம் -03.11.2003

04) முதலாம் வருட இரண்டாம் அரையாண்டு செய்முறைப் பரீட்சைகள் - சித்திரமும் வடிவமைப்பும் -17.11.2003

05) முதலாம் வருட இரண்டாம் அரையாண்டு எழுத்துப் பரீட்சைகள் இசை,நடனம், சித்திரமும் வடிவமைப்பும் -13.11.2003

**நேர அட்டவணை, மற்றும் மேலதிக விபரங்களுக்கு கலைப்பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகையைப் பார்வையிடவும்**

பதிவாளர்

(C/6770)



# உங்கள் வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்

வலம்புரியின் வாரமலர் பக்கங்கள் - 20 விலை :-14.00

சங்கு நாதம் Sankunatham

(20 - 26 ஒக்டோபர் 2003)

என் இந்த எதிர்ப்பு




கண்காணிப்புக்குழுத் தலைவரை பதவி விலக்கத் துடிக்கிறார் ஜனாதிபதி

மீனவர்கள் என்றாலே படையினருக்கு அலர்ஜி

இலங்கையைப் பாதுகாக்க இந்தியாவுடன் ஒப்பந்தம் - அசத்துகிறார் ரணில்

ஆலடி மாநாடு

வியாசரின் பதில்கள்

பொன்.கணேசமூர்த்தியின் கடிவாளம் இல்லாத கனவு (நெடுங்கதை)

இன்னும் பற்பல...

வாசிக்கத் தவறாதீர்கள் திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

விலை ரூபா 14.00/-

சங்குநாதம்

## இன்று ஒரு தகவல்

# நோயாளியைச் சந்திக்கும் போது!

நமக்கு மிகவும் வேண்டப்பட்ட ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரைப் பார்த்து விட்டு வருவதாகச் செல்கின்றோம். அந்தச் சமயத்தில் நாம் எப்படி நடந்து கொள்ளவேண்டும்? அமெரிக்க மருத் துவர் ஒருவர் இதுபற்றிய சில ஆலோசனைகளை நமக்குத் தெரிவித்துள்ளார்.

படுத்திருக்கும் ஒருவர் வெகு விரைவில் குணமாகி எழுந்து வருவது அவரைப் பார்க்கச் செல்வோரிடம் தான் உள்ளது. ஒரு நோயாளி ஒரு அறையில் தனியாகப் படுத்திருக்கின்றார் என்றால் அந்தத்தனிமையே அவருக்கு ஓர் குளிசை போன்றது. அந்தத் தனிமையைக் கெடுப்பது போன்று நடந்து கொள்ளக்கூடாது. சொல்லாமல் கொள்ளாமல் திடீரென்று அவரது அறைக்குள் சென்று அவருக்கு ஆச்சரியத்தையோ அதிர்ச்சியையோ ஏற்படுத்தக்கூடாது. கதவைத் தட்டி அனுமதி கேட்டுக்கொண்டு உள்ளே செல்வது தான் சரியானது.

உள்ளே சென்றதும் அங்குள்ள மருத்துவ சாதனங்கள், படுக்கை வசதி போன்றவற்றைப் பார்த்துக் குறை கூற ஆரம்பித்துவிடக்கூடாது. ஏதாவது குறையிருந்தால் அதை டாக்டரிடமோ அல்லது தாதியிடமோ கூறலாமே தவிர நோயாளியிடம் கூறக்கூடாது. நமக்குச் சிகிச்சை தரும் முறை சரியில்லை என நோயாளி நினைக்க ஆரம்பித்துவிட்டால் நோயாளிக்கு மிகவும் கெடுதலாகத்தான் அது அமையும்.

நோயாளிக்கு மருந்து கொடுக்க வேண்டுமா? அவரது உடலைத் தொட்டுத் தடவ வேண்டுமா? மிகவும் மென்மையாகவே அவற்றைச் செய்யவேண்டும். நமது பலம் முழுவதையும் அவரிடம் காட்டக்கூடாது. நிதானம் ,பரிவு, அன்பு போன்றவற்றை நாம் மறந்துவிடக்கூடாது. நோயாளியின் பக்கத்தில் உட்கார்ந்து பேசவேண்டும் என ஆசைப்பட்டால் முதலில் உட்கார்வதற்கும் இடம் இருக்கின்றதா என்று பாருங்கள். இடம் இருந்தால் அமர்ந்து பேசுங்கள். நின்று கொண்டே இருக்க வேண்டியதில்லை. நம்மைப் பார்க்க வந்திருப்பவர் நின்று கொண்டே இருக்கின்றாரே என்ற மனத்தாக்கம் நோயாளிக்கு வந்து விடும். அதற்கு நாம் காரணமாக அமைந்துவிடக்கூடாது.

நோயாளியிடம் நான்கு வார்த்தை ஆறுதலாகப் பேசுவதாக நினைத்துக்கொண்டு ''ஐயோ பாவம்! முன்பு இந்த உடம்பு எவ்வளவு திடகாத்திரமாக இருந்தது. இப்போது இப்படியாகி விட்டதே'' என்று கூறக் கூடாது. அது அவருக்கே தெரியும். என்ன பேச வேண்டும் என்றால் இப்போது எப்படி இருக்கின்றீர்கள் என்று உற்சாகமாக ஆரம்பிக்க வேண்டும். ஆஸ்பத்திரி எப்படி இருக்கின்றது. ஆகாரம் என்ன தருக்கின்றார்கள் என்று விசாரியுங்கள். குறை எதுவும் இருந்தால் நிர்வாகியிடம் கூறுங்கள். முதலில் உங்களுடன் பேசிக் கொண்டிருக்க நோயாளி விரும்புகின்றாரா என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நோயாளியிடம் வெறுமனே நோயைப் பற்றி மட்டுமே பேசிக்கொண்டிருக்கக்கூடாது. அவருக்கு நம்பிக்கையூட்டக்கூடிய வகையில் உங்களது பேச்சு இருக்க வேண்டும். ''எனது உதவி எதுவும் உங்களுக்குத் தேவையா? உங்களுக்காக நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேளுங்கள்.

இப்படிக் கேட்டதனால் நோயாளிக்குத் தனது உடல் நலத்தில் அக்கறை உள்ள ஒருவரைச் சந்தித்த தெம்பும் உற்சாகமும் ஏற்படும். முடிந்தால் மருத்துவர்களையும், தாதிகளையும் சந்தியுங்கள். நோயாளியின் உடல் நிலை மாற்றங்கள் குறித்துப் பேசி அவரது உடல் நலனில் உங்களது அக்கறையை வெளிப்படுத்துங்கள். இதனால் நோயாளியைப் பற்றிக் கவலைப்பட யாருமே இல்லை என்ற எண்ணம் அவர்களது மனதை விட்டுப்போய் விடும்.

நோயாளிகளிடமிருந்து எப்போது விடைபெறவேண்டும் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். சிலவகை நோயாளிகளிடம் சில நிமிடம் இருந்தாலே போதும். சில நோயாளிகளிடம் ஒரு மணித்தியாலம் இருப்பது கூட குறைவாகத் தெரியும். நீங்கள் எவ்வளவு நேரம் நோயாளியிடம் இருந்தீர்கள் என்பது முக்கியமில்லை. உங்களால் அவருக்கு எந்த அளவுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்றது என்பது தான் முக்கியம்.

சிலர் நோயாளி உண்பாரோ இல்லையோ நிறையப்பழங்களை வாங்கிக்கொண்டுபோய் குவித்து விடுவார்கள். அது முக்கியமல்ல. இதுபோல் அதிக மணம் வீசக் கூடிய நறுமணப்பொருட்களையும் எடுத்துக் கொண்டு போக வேண்டியதில்லை. ஒரு நோயாளியைப் பார்க்கப்போகும் போது கையில் ஒன்றும் கொண்டு போகவில்லையே என்று கவலைப்பட வேண்டியதில்லை. அவர் இருக்கும் நிலையில் உங்கள் கையையா பார்க்கப் போகின்றார். நோயாளிக்கு மருத்துவர் சிகிச்சையளிக்கிறார். நீங்கள் அவருக்குத் தெம்பையும் தைரியத்தையும் கொடுக்கவேண்டும்.

இவ்வளவும் அமெரிக்க வைத்தியர்கள் கூறியுள்ள ஆலோசனை. நோயாளியைப் பார்க்கப் போகின்றபோது எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதற்கே இவ் ஆலோசனை. நோயாளியை அழைத்துச் செல்பவர்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்றும் கூறியிருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும். ஏனென்றால் எனது அனுபவம் அப்படி .

ஒரு நண்பர் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அவருக்குத் தெரிந்த ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளாராம். அறை விபரம் எல்லாவற்றையும் கூறி அவரைப் போய் பார்த்துவிட்டு தனக்கு அறிவிக்கும்படி கூறினார். நானும் சென்று பார்த்தேன் ''எப்படி உடல் நிலைமை என்று விசாரித்து விட்டு உடலைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டுப் புறப்பட்டேன். அவர் கூறினார் '' எனது உடலுக்கு ஒன்றுமில்லை எனது தம்பிக்குத்தான் நெஞ்சுவலி'' என்றார். '' அவர் எங்கே ?'' என்றேன் '' எக்ஸ்ரே எடுக்கப்போய் விட்டார். இந்தக் கட்டில் சும்மாதான் இருந்தது எனவே நான் சிறிது நேரம் படுத்திருந்தேன'' என்றார்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

---

### முஸ்லிம்கள் அரசியல் குரோதங்களை விடுத்து

# நிதானமாகவும் பொறுப்புடனும் செயற்படவேண்டிய காலம்

## அமைச்சு ஆலோசகர் அலிஸாஹிர் கருத்து

(கொழும்பு)

அடுத்தகட்டச் சமாதானப் பேச்சு வார்த்தைகளின் போது முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகள் குறித்து சமர்ப்பிக்கப்படும் யோசனைகள் நிராகரிக்கப்படமாட்டாது என அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் தெளிவாகத் தெரிவித்துள்ள இந்த நிலையில், தற்போது எமது நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் அனைத்தும் சர்வதேச நாடுகளின் கவனத்தை வெகுவாக ஈர்த்துள்ளதாக கொள்கைத் திட்டமிடல் அபிவிருத்தி அமுலாக்கல் அமைச்சின் ஆலோசகர் அலிஸாஹிர் மௌலானா தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி ஒதுக்கீட்டில் ஏறாவூர்-அகமட் பரீட் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட மாடிக்கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு வைபவத்தில் பிரதம அதிதியாக அலிஸாஹிர் மௌலானா கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்படி கருத்தைத் தெரிவித்துள்ளார்.

இது விடயம் தொடர்பாக அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

எமது நாட்டில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ளதுடன், உலக நாடுகள் பலவற்றின் நம்பிக்கையையும் பெற்றுள்ளன.

நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதை சர்வதேசமே ஆதரித்து வரவேற்று நிற்கும் இந்த நிலையில், எமது நாட்டிற்குள்ளே முஸ்லிம் பிரதிநிதிகள் அரசியல் ரீதியான குரோதங்களினால் வேறுபட்டு நிற்கின்றனர்.

மிகவும் நிதானமாகவும் பொறுமையுடனும் செயற்பட வேண்டிய இக்கால கட்டத்தில் முஸ்லிம்கள் தமக்கிடையே கருத்து வேறு பட்டு பிரிந்து நிற்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

எனவே,சமாதான முயற்சிகளுக்கு இவ்வாறான கருத்து வேற்றுமை மற்றும் முரண்பாடான செயற்பாடுகள் முட்டுக்கட்டையாக இருக்காத வண்ணம் அனைவரும் ஒற்றுமையுடன் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, இடைக்கால நிர்வாக சபை விடயத்தில் முஸ்லிம்களின் அபிலாஷைகள் குறித்து வெளிநாடுகளில் உள்ள பிரமுகர்கள் மற்றும் சட்ட வல்லுநர்களுடன் கலந்து ஆலோசித்து, முஸ்லிம் தரப்பு யோசனைகளைத் தயாரிப்பதற்காக ரவூப்ஹக்கீம் தலைமையிலான குழுவொன்று இலண்டன் பயணமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பி-18)

---

## இராசி பலன்

**28. 10. 2003**

**(ஐப்பசி 11, செவ்வாய்)**

திருதியை - ந.ப.12.24வரை

அனுசம் - பி.ப.1.07 வரை

இராகுகாலம் - 3.03 - 4.33

சுபநேரம் - 10.33 - 12.03

சதுர்த்தி விரதம்

**மேடம்**
பிரயாணக் கஷ்டம், காரிய தாமதம், உறவினர் வெறுப்பு, அஜீரணக்கோளாறு.

**இடபம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, விருந்து உபசாரம், வாகன சுகம், பொருள் சேர்க்கை.

**மிதுனம்**
சுவாரஸ்யம், ஆரோக்கியம்,விரும்பிய பொருள கிடைக்கும் வாய்ப்பு, உறவினர் உதவி.

**கடகம்**
காரிய நாசம், மனக்கவலை, பணத் தட்டுப்பாடு, தொழில் ஆர்வம்.

**சிங்கம்**
சகோதரர் உதவி, மாணவர் கல்வியில் ஆர்வம், தாய் வழி உறவு, தன்னம்பிக்கைக் குறைவு

**கன்னி**
தடைப்பட்ட காரியம் கைகூடும், மாதர் நட்பு, நற்கீர்த்தி, பொருள் சேர்க்கை

**துலாம்**
வீண் விவாதம், எடுத்தகாரியம் தாமதமாகும், உஷ்ண வியாதி, அதிக செலவு.

**விருச்சிகம்**
தெய்வ சிந்தை, வெகுமானம், காரிய அனுகூலம், போசன சுகம்.

**தனுசு**
காரிய அலைச்சல், தொழில் நன்மை, சிந்தனை மிகுதி, சுப செலவு,

**மகரம்**
குடும்ப நன்மை, நண்பர்கள் சந்திப்பு காரிய அனுகூலம், பெருமை அடைதல

**கும்பம்**
பிறருக்கு உதவுதல், பெரியோரால் மதிக் கப்படுதல், செய்தொழில் நன்மை

**மீனம்**
புதிய திட்டமிடல் வயிற்றுக் கோளாறு, திடீர் பிரயாணம், காரிய சிந்தை.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

---

# அரசியல் விழிப்புணர்வுள்ளவர்களாக தமிழ்மக்கள் மாறவேண்டும்

## மதகுருமார்கள் கூட்டாகக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சுதந்திரமும் சுபீட்சமும் கொண்டஓர் மக்கள் கூட்டமாக நாம் வாழ்வதற்கு அனைவரும அரசியல் விழிப்புணர்வு கொண்டவர்களாக மாற வேண்டும் என இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மதகுருமார்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற 2வது யாழ். மாவட்ட பேராளர் சங்கம நிகழ்வில் கலந்து கொண்டு ஆசி உரை வழங்கிய சிவசிறி மகா கணபதீஸ்வரக் குருக்கள் மௌலவி எம். இர்பான் மற்றும் வணபிதா ஜெ.ஜெயக்குமார் அடிகள் ஆகியோரே இக் கோரிக்கையை விடுத்தனர்.

தற்போது தமிழ் மக்கள் போரும் சமாதானமும் அற்ற சூழ் நிலையில் வாழுகின்றனர். அனைவரும் மக்கள் என்ற நிலையில் இருக்கின்றோம் என்பதை உணராது தமது எண்ணம்போல் செயற்பட முனைகின்றனர்.

இது எதிர்காலத்தில் எமது சமூகம் பல பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டிய சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கும்.

சமூகப் பிணக்குகளும் குறுகிய மனப்பான்மையும் உடைய மக்கள் சமூகம் எமது பிரதேசத்தில் கட்டி வளர்க்கப்படுகிறதே தவிர,

எம் தமிழினத்தின் அரசியல் நிலைப்பாடு என்ன? எமது சுபீட்சமான வாழ்விற்கு தடையான காரணிகள் எவை?என்பவற்றைக் கண்டறிந்து அவற்றை அகற்றி ஒற்றுமை மிக்க ஒரு சமூகத்தை கட்டி எழுப்புவதற்கு குடாநாட்டு மக்கள் சமூகம் அணிதிரள வேண்டும். எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனா . (தி-4)

---

# துறைமுக அதிகார சபை வெளிநாடுகளில் முதலீடு

## அமைச்சர் ஹக்கீம் பெருமிதம்

(கொழும்பு)

வெளிநாட்டு நிறுவனங்கள் பல தமது இலாப நோக்கத்திற்காக இலங்கையில் முதலீடு செய்து வரும் வழமையான செயற்பாட்டில் இருந்து மாறுபட்டு இலங்கைத் துறைமுக அதிகார சபை தனது அதீத வளர்ச்சியினால் வெளிநாடுகளில் முதலீடு செய்ய முன்வந்துள்ளமை மிகவும் பயன்மிக்க முன்னேற்றகரமான ஒரு நடவடிக்கையாகும் என துறைமுக அபிவிருத்தி, கப்பற்துறை, கிழக்கு அபிவிருத்தி மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கடந்த புதனன்று கொழும்பு துறைமுகத்தில் இடம்பெற்ற சகல வசதிகளையும் கொண்ட ஆயுர்வேத மருத்துவ நிலையத்தை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வில் ஹக்கீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்படி விடயத்தை தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இலங்கை துறைமுக அதிகார சபை வியக்கத்தக்க வளர்ச்சிகளை அடைந்து வரும் இக்கால கட்டத்தில் தனது சேவையை வெளிநாடுகளிலும் விஸ்தரிக்கும் நோக்கில் அது வெளிநாட்டுத் துறைமுகங்களில் முதலீடு செய்ய முன்வந்துள்ளது.

அத்துடன்,கொழும்புத் துறைமுகத்தின் ஊழியர்களின் அதிகரித்த செயல்திறன் மற்றும் வருமானம் உள்ளிட்ட மற்றும் பல வளர்ச்சிகளின் பயனாக சர்வதேச துறைமுக முகாமைத்துவ செயற்பாடுகளில் முதலீடுகளை மேற்கொள்ளக்கூடிய சாதகமான நிலை தோன்றியுள்ளமை மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும் எனக் குறிப்பிட்டுள்ளார். (பி-18)

---

# ஜே.வி.பி. உறுப்பினர்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதிக்கும் ஜே.வி.பியின் உறுப்பினர்களுக்குமிடையிலான முக்கிய சந்திப்பொன்று ஜனாதிபதி மாளிகையில் கடந்த சனியன்று நடைபெற்றுள்ளது.

இந் சந்திப்பின் போது நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகள் குறித்து ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜே.வி.பி. தரப்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச, அனுரா திஸநாயக்க, கட்சியின் பிரசாரச் செயலர் ரில்வின் சில்வா ஆகியோர் கலந்து கொண்டனர்.

சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர ஆகியோரும ஜனாதிபதியுடன் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கருத்துத் தெரிவிக்கையில்,

சமாதான நடைமுறைகளில் இருந்து நோர்வே முற்றாக வாபஸ பெறவேணடுமென வலியுறுத்தியுள்ளார்.

சமாதான முயற்சிகளுக்கு அனுசரணையாளராக இருக்குமாறு நோர்வேயை முதன் முதலில் அழைததவர் ஜனாதிபதி தான் என்று கூறிய வீரவன்ச, போர்நிறுத்தக் கண்காணிபபுக் குழுத்தலைவரை உடனடியாக மாற்றவேண்டும் என்ற ஜனாதிபதியின் கருத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

இதேவேளை,ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர நடைபெற்றபேச்சுக்கள் முறிவடைந்த பின்னர் இரு கட்சியனருக்குமிடையே நடைபெற்ற முதலாவது சந்திப்பு இதுவென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(ந-5)

# ஈராக்கின் அதிபாதுகாப்பு வலயங்களில் அடுத்தடுத்து குண்டுவெடிப்பு

### சதாம் ஆதரவாளர்கள் மீது அமெரிக்கா குற்றச்சாட்டு

(பக்தாத்)

ஈராக்கின் தலைநகர் பக்தாத்தின் அதி பாதுகாப்பு வலயங்களில் இரண்டு குண்டுகள் அடுத்தடுத்து வெடித்துள்ளன.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இக் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் அமெரிக்கப் படைவீரர் ஒருவர் உயிரிழந்ததுடன் 17 பேர் காயமடைந்துள்ளனர்.

ஈராக்கின் அமெரிக்கத் தலைமையகம் அருகே ஒரு குண்டும், மற்றைய குண்டு ஹோட்டல் ஒன்றின் அருகேயும் வெடித்துள்ளன. இக் குண்டுத்தாக்குதல்களை அமெரிக்காவிற்கு எதிரான சதாம் ஹுசைனின் ஆதரவாளர்களே நடத்தியுள்ளனர் என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் பக்தாத்தில் அமெரிக்கப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தங்கியிருந்த விடுதியில் குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது தெரிந்ததே. (பி-2)

# இளைஞர்களைக்கடத்தி கட்டாயத் திருமணம்

### பீகாரில் அதிகரிக்கும் சம்பவங்கள்

(பீகார்)

திருமணமாகாத இளைஞர்களை பெண் வீட்டார் கடத்தி கட்டாயத் திருமணம் செய்து வைப்பது பகாரின் சில மாவட்டங்களில் அதிவேகமாகப் பரவி வருகிறது.

முன்பு இந்த நடைமுறை இலைமறை காயாக இருந்தது. இப்போது குண்டர் கும்பல்களின் துணையோடு இந்த கொடூர நடைமுறை காட்டுத் தீ போல பரவிவருகிறது.

இதனால், திருமண வயது இளைஞர்களின் குடும்பங்களில் அச்சம் புரையோடியுள்ளது.

கட்டாயத் திருமண நடைமுறை அதிகரிக்க காரணமாக அமைந்துள்ளது சதனக் கொடுமையாகும். குறிபபாக மேல் சாதியினர் சமூகத்தில் சீதனக் கொடுமை தீவிரமாக காணப்படுகிறது. இதனால் இளைஞர்களை கடத்தி கட்டாயத் திருமணம் நடத்திவைப்பதில் நிறைய பெண் வீட்டார் ஆர்வம் காட்டுகின்றனர் என்கிறார் சமூகத் தொண்டரான பிரமோத் சிங் என்பவர்.

இளைஞர்களை கடத்தி திருமணம் முடித்துவைக்கும் குண்டர்கள் அதற்காக பெரிய தொகையை லஞ்சமாகப் பெறுகின்றனர். தாலி கட்டி முடிந்ததும் அவர்களது கடமை முடிகிறது. அதற்குப் பிறகு தம்பதிகள் வாழ்க்கை எப்படி அமைந்தாலும் அவர்களுக்கு கவலையில்லை.

கட்டாயத் திருமணம் பெருபாலன வீடுகளில் சோக முடிவில் அமைகிறது என்பதே கசப்பான உண்மை. அழையா விருந்தாளிகளாக புகும் மணப்பெண்கள் கொடுமைக்கு உள்ளாவதும், தாய் வீட்டுக்கு விரட்டி அனுப்பப்படுவதும் கண்ணீர்க் கதையாக அமைந்துவிட்டது.

கிராமப்பகுதிகளில் இந்த அவலம் அதிகம் காணப்படுகிறது. கட்டாயத் திருமணங்களில் பெண் வீட்டாருக்கு ஆதரவாக கிராம மக்கள் செயல்படுகின்றனர். (பி)

உலக தரிசனம்

### அமெரிக்க காங்கிரஸ் குழுவிற்கு

# அணு ஆலைகளைக் காண்பிக்க வடகொரியா தயாராம்!

### சர்வதேச நாடுகள் வரவேற்பு

(பியோங்யாங்)

தமது அணு ஆலைகளை அமெரிகக்க் காங்கிரஸ் குழுவுக்குக காண்பிக்க வடகொரியா தீர்மானித்துள்ளது.

அமெரிக்கக் காங்கிரஸ் குழு ஒன்று நேற்று முன்தினம் வடகொரியா செல்லவிருந்தது. காரணம் கூறாது திடீரென அமெரிக்கா இந்த விஜயத்தை ரத்துச் செய்தது.

இந்நிலையில், தற்போது தாம் எடுத்துள்ள தீர்மானத்திற்கு இணங்க அமெரிக்கக் காங்கிரஸ்குழு தமது நாட்டிற்கு வரவேண்டியது அவசியம் என வடகொரியா வலியுறுத்தியுள்ளது.

வடகொரியாவின் இந்த நிலைப்பாடு வரவேற்கத் தக்கது என சர்வதேச சமூகம் தெரிவித்துள்ளது. எனினும், அமெரிக்க காங்கிரஸ் வடகொரியாவிற்கு தற்போது செல்ல நினைப்பது ஆறு தரப்புப் பேச்சுக்களுக்குப் பெரும் முட்டுக்கட்டையாக அமைந்துவிடும் என வெள்ளை மாளிகைத் தகவல்கள் கூறுகினறன. (பி-2)

### பொடாச் சட்ட ஆய்வுக் குழுவுக்கு

# கூடுதல் அதிகாரம் வழங்க வேண்டாம் என்கிறார் ஜெயா

(சென்னை)


பொடாச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள பொடா மறு ஆயவுக்குழுவிற்கு கூடுதலான அதிகாரம் வழங்க அவசர சட்டம் ஒன்றைப் பிறப்பிக்க மத்திய அரசு எடுத்துள்ள முடிவிற்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா கடுமையான ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

பொடாச் சட்டம் கொண்டுவரப்பட்டதன் நோக்கத்தையே இந்தத் சட்டம் அழித்துவிடும் என அவர் கூறியுள்ளார்.

நாட்டின் தற்போதைய பாதுகாப்பு சூழ்நிலையில், உள்நாட்டுப் பாதுகாப்பைப் பேண தற்போதுள்ள சட்ட திட்டங்களைப் பலப்படுத்த வேண்டும் என்றும், அதில் திருத்தங்களை மேற்கொள்வது ஏற்புடையதல்ல என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, பயங்கரவாதத்தை ஒழிப்பதற்குக் கொண்டுவரப்பட்ட பொடாச் சட்டம் அரசியல் பழிவாங்கல்களுக்காகப் பயன்படுத்தப்படுவதாகவும், இந்த வகையிலேயே ம.தி.மு.க.பொதுச் செயலர் வைகோ உட்பட, அக்கட்சியைச் சேர்ந்த 8 பேர் கைதுசெய்யப்பட்டு சிறைகளில் வைக்கப்பட்டுள்ளார்கள் எனவும், பல தரப்புக்களில் இருந்தும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. இக் குற்றச்சாட்டுக்களுக்குத் தீர்வு காண்பதற்கே பொடா மறு ஆய்வுக் குழுவிற்கு கூடுதலான அதிகாரம் வழங்கும் அவசர சட்டம் கொண்டு வர முடிவெடுக்கப்பட்டதாக மத்திய அமைச்சரவை கூறியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (பி-2)

### நயக்கராவில் குதித்து மீண்டவர்



நயக்கரா நீர்வீழ்ச்சியில் குதித்து உயிருடன் மீண்டவர் என்று கூறப்படும் 40 வயதான கேர்க் ஜோன்ஸ் என்பவர் இவர் தான்.

இந நீர்வீழ்ச்சியில் படகோ, விசேட உடையோ இன்றிக் குதித்து மீண்ட முதல் மனிதர் இவர் என்று கருதப்படுகின்றது.

### பாகிஸ்தானில்

# தீவிரவாதத்துடன் தொடர்புடைய 15 மாணவர்கள் நாடுகடத்தப்படுவர்

(இஸ்லாமபாத்)

இஸ்லாமிய பிரிவினைவாதக் குழுக்களுடன் தொடர்புடைய 15 மலேஷிய மாணவர்களை நாடு கடத்த பாகிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது.

ஆயினும் கைதுசெய்யப்பட்டவர்களில் விசாரணை செய்யப்பட்டு வருகின்ற 5இந்தோனேஷிய மாணவர்களை தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைக்க பாகிஸ்தான் அரசு தீர்மானித்துள்ளது.

'கடந்த செப்ரெம்பர் மாதம் கராச்சியில் வைத்து இவர்கள் 20 பேரும் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

தீவிர விசாரணைக்குட்படுத்திய பின்னரே இவர்களை நாடுகடத்த முடிவு செய்ததாக பாகிஸ்தானிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (பி-2)

### ஈரானின் அணு ஆயுத உற்பத்தி

# உண்மை நிலையைக் கண்டறிய ஐ. நா. ஆய்வாளர்கள் பயணம்

(தெஹறான்)

இரகசியமாக அணுவாயு தயாரிப்பில் ஈடுபடவில்லை என்று ஈரான் கூறுவது உண்மையா என்பதை அறிவதற்காக ஐக்கிய நாடுகளின் ஆயுத ஆய்வாளர்கள் 6பேர் ஈரான் சென்றுள்ளனர்.

இதனிடையே ஈரானின் அணுசக்தி நடவடிக்கைத் தகவல்களை சர்வதேச அணுசக்தி நிறுவனத்திற்குத் தெரிவிக்கக் கூடாது என்று வலியுறுத்தி ஈரான் தலைநகர் தெஹறானில் மக்கள் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

இந்நிலையில் ஐக்கிய நாடுகளின் ஆயுத ஆய்வாளர்கள் 6பேர் அங்கு சென்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். (பி-2)



குழந்தைகள் தாயின் கருவில் இருக்கும்போதே விரலைச் சப்பிச் சுவைக்கும் பழக்கத்தை ஆரம்பித்து விடுகின்றனவாம். இதனை நிரூபிக்கும் வகையில் சுவீடன் புகைப்பட நிபுணர் ஒருவர் தாயின் கருபபைக்குள் இருக்கும் போது தனது விரலைச் சப்பிச் சுவைக்கும் குழந்தையை படமாக்கியுள்ளதையே இங்கு காண்கிறீர்கள்.

# தொழில்கட்சி எம்.பி. வெளியேற்றப்பட்டார்

(லண்டன்)

பிரிட்டிஷ் துருப்புக்களைத் தாக்குமாறு அரபுப் படைகளைத் தூண்டினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் தொழிற்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோர்ஜ் கலோவே என்பவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

மார்ச் 28ஆம் திகதி அபுதாபி தொலைக்காட்சிக்கு கலோவே அளித்த பேட்டியொன்று தொடர்பாகவே அவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும், ஈராக் மீதான நடவடிக்கை தொடர்பாக ஏனைய விமர்சகர்கள் தெரிவித்த கருத்துக்களை விட இவர் மிக மோசமான விமர்சனங்களை வெளியிட்டிருக்கிறார் என்றும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

''ஈராக் எல்லா அரபு நாடுகளுக்காகவும் போராடுகின்றது. அரபு நாடுகளின் படைகள் எங்கே போய்விட்டன?'' என்று அவர் கூறியதாகச் சுட்டிக் காட்டப்பட்டது. அதேபோல் 'பிரிட்டிஷ' இராணுவத்தைக் கீழ்ப்படிய வேண்டாம் என்று அவர் கருத்து வெளியிட்டிருந்ததாகவும் கூறப்பட்டது.

கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டாலும், கலோவே தொடர்ந்தும் கிளாஸ்கோ கெல்வின் தொகுதியின் சுயேச்சை உறுப்பினராக இருக்கமுடியும். (பி)

# டெங்கு காய்ச்சலுக்கு 19 பேர் பலி

(புதுடில்லி)

புதுடில்லியில் வேகமாகப் பரவி வரும் டெங்கு காய்ச்சலிற்கு இதுவரை 19பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் இந்தக் காய்ச்சலால் ஆயிரத்து 400இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகம் உட்பட பல பகுதிகளில் இக் காய்ச்சல் பரவியுள்ளது. (பி-2)

# கலிபோர்னியா காட்டுத்தீக்கு 10 பேர் வரை பலியாகினர்

### ஆயிரக்கணக்கானோர் வெளியேற்றம்

(கலிபோர்னியா)

கலிபோர்னியாவின் தென் பகுதியில் பரவி வரும் காட்டுத்தீக்கு 10பேர் இரையாகியுள்ளனர்.

மேலும் அப்பகுதியில் தீயின் வேகம் அதிகரித்துச் செல்வதால் அப்பகுதி மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர் என தெரிவிக்கப்படு கின்றது.

இதனால் அங்கு அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன், பிரதான வீதிகள் மூடப்பட்டும், மின்சாரம் துண்டிக்கப்பட்டுமுள்ளது.

இதேவேளை, இத்தீ திட்டமிட்ட சதிச் செயலாக இருக்கலாம் என பரவலாக எழுந்துள்ள சந்தேகத்தையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்ளவும் ஆரம்பித்துள்ளனர். (பி-2)

## தப்பியோடிய படையினரில் 5 ஆயிரம்பேர் அம்பாந்தோட்டை பகுதியில் பதுங்கியுள்ளனராம்

(கொழும்பு)

இராணுவத்தில் இருந்து தப்பி யோடிய சுமார் 5 ஆயிரம் இராணுவ வீரர்கள் கம்பஹா மாவட்டத்தில் மறைந்து வாழ்வதாக இராணுவத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் 1552 பேர் தங்களின பதவி விலகலை அறிவித்த போதும், 520 பேரின் பதவி விலகலுக்கான கடிதங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், ஏனையவர்கள் சட்ட ரீதியாக சேவையிலிருந்து விலகு வதற்கு மீண்டும் வழங்கப்பட்ட கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளதாக அரச பாதுகாப்பு அமைச்சின் நட வடிக்கைச் செயலகம் தெரிவித் துள்ளது. (பி-61,10)

## நிவாரணத் தொகையை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிவாரணத் தொகையினை அதி கரிப்பதற்கு சமூக நலன்புரி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச் சின் செயலாளர் வி.ஜெயராஜசிங் கம் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலைமையில் வறியோருக்கு வழங்கப்பட்டுவரும் நிவாரணத் தொகையை அதிகரிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ள தாகக் குறிப்பிட்ட அவர்,

இந்த நிவாரணத் தொகையை அதிகரிப்பதற்காக அமைச்சரவைக்கு விரைவில் பிரேரணை ஒன்று சமர்ப் பிக்கப்பட்டவுள்ளதாகவும் தெரிவித் தார். (பி-61,10)

### தற்போது அம்மையாரின் கோபம் இதன்மீது தான்




# செய்தித் துளிகள்

### முள்ளியவளை வித்தியானந்தா முதலாமிடம

(மருதங்கேணி)

மனிதவள அபிவிருத்தி உரிமை கள் அமைச்சினால் நடாத்தப்பட்ட மனிதவள உரிமைகள் தொடர் பான புதிர்ப்போட்டியில் முள்ளிய வளை வித்தியானந்தாக் கல்லூரி முதலாமிடத்தை பெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்திற் குட்பட்ட பாடசாலை உயர்தர வகுப்பு மாணவர்களிடையிலான மேற்படி போட்டியில் முள்ளியவளை வித்தி யானந்தாக் கல்லூரி முதலாமிடத்தை பெற்று மாகாண மட்டப் போட் டிக்கு தெரிவாகியுள்ளது. (தி-35)

### கடன் மீளளிப்புச் செய்யவில்லை

(திருநெல்வேலி)

கிளிநொச்சி இலங்கை வங்கிக் கிளையில் கடந்த 2000ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் விவசாய கடனைப்பெற்ற விவசாயி கள் இதுவரை அந்தக்கடனை மீளச் செலுத்தவில்லை என வங்கிவட்டா ரங்கள் தெரிவித்துள்ளன.

கிளிநொச்சி வங்கிக் கிளையில் 2000 ஆண்டுக்கு முன் கூடுதலான விவசாயிகள் கடன்களைப் பெற்றனர். நாட்டின் யுத்த சூழல் காரணமாக அவைமீளச் செலுத்தப் படாது உள்ளன.

இக் கடன்களை மீளச் செலுத் தும் பட்சத்தில் பெறப்பட்ட கடன் களின் வட்டிகள் அறவிடப்படமாட் டாது எனவும் அவ்வட்டாரங்கள் மேலும தெரிவித்துள்ளன. (தி-43)

### மருதங்கேணியில் கிராமிய வங்கி

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம் மருதங்கேணியில் கிராமிய வங்கியொன்றை அண்மையில் ஆரம்பித்து வைத்துள்ளது.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இதுவரை காலமும் கிராமிய வங்கி எதுவும் இல்லாமை யால் அப்பகுதியில் உள்ள மக்கள் தமது சேமிப்புக்களை வைப்பிலிட முடியாமல் பெரிதும் சிரமத்துக்கு உள்ளாகி வந்தனர்.

இவ்வாறான சிரமங்களைப் போக் கும் ஒரு நடவடிக்கையாக மேற்படிப் பகுதியில் கிராமிய வங்கியொன்று வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கத்தினால் அமைக்கப்பட்டு, சங்கத் தலைவர் வி.எஸ்.தியாகராசா வால் அண்மையில் திறந்துவைக் கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது. (தி-35)

### சட்டவிரோத மின்பாவனை அதிகரிப்பு

(வடலியடைப்பு)

மானிப்பாய் பிரதேசத்தில் உள்ள சில பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவ தாகக் குறிப்பிட்ட பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக அடிக்கடி மின் தடை ஏற்படுவதாக அப்பகுதி மக் கள் விசனம் தெரிவித்துள்ளனர். (தி-21)

### இணைப்புக்குழுக் கூட்டம்

(சுதுமலை)

யாழ் மாவட்ட புனர்வாழ்வு மீள் புனரமைப்பு அபிவிருத்தி சம்பந் தமான இணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி வியா ழக்கிழமை யாழ். செயலகத்தில் அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்குமாறு கோரி சகல பிரதேச செயலாளர்கள், உள்ளூ ராட்சி மன்ற 'விசேட ஆணை யாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களிற்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (பி-252)

### தபால்பெட்டி சேதம்

(கந்தரோடை)

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு முன்பாக உள்ள தபால் பெட்டி கடந்த சில மாதங்களாக சேதமடைந்த நிலையில் கவனிப்பா ரற்று வீழ்ந்து கிடக்கின்றது.

இதனால், மேற்படி பகுதியில் உள்ள மக்கள் தமது தபால் தொடர் புகளை ஏற்படுத்திக் கொள்வதில் பெரும் இடஞ்சல்களை எதிர்நோக்கி வருகின்றனர். (உ-103)

### நிர்வாகிகள் தெரிவு

(கந்தரோடை)

வலிகாமம லீக் உதைபந்தாட்டக் கழகத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு கடந்த புதன்கிழமை இடம் பெற்றது.

இதில், தலைவராக சு.புண்ணிய சீலனும், உபதலைவராக சே.து. விபுலானந்தனும், செயலாளராக மு.நடராஜாவும் உப செயலாளராக சி.சுபாஸ்"ம், பொருளாளராக வி. யோகலிங்கமும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். (உ-103)

### ஓடுகள் அன்பளிப்பு

(அல்லைப்பிட்டி)

தற்போது சுவிற்சர்லாந்தில் வசித்துவரும் நெல்லியடி மெ.மி. த.க. பாடசாலையின் பழைய மாண வர் ஒருவர் அப் பாடசாலைக்கென பல ஆயிரக்கணக்கான ரூபாய் பெறுமதியான ஓடுகளை அன்பளிப் புச் செய்துள்ளார். (உ-98)

### தொலைக்காட்சிப் பாவனை

(நவாலி)

நல்லூர்ப் பிரதேச சபைக்குட்பட்ட கொக்குவில் பொது நூலகத்தில் வாசகர்களின் நன்மை கருதி தொலைக்காட்சி ஒன்று பாவனைக் காக வைக்கப்பட்டுள்ளது. (உ-102)

### மலசலகூடம் அமைக்க நிதி

சண்டிலிப்பாய் பகுதியில் வறு மைக்கோட்டுக்குட்பட்ட, தெரிவுசெய் யப்பட்ட 40 குடும்பங்களுக்கு மல சலகூடம் அமைப்பதற்குத் தேவை யான நிதியை இந்து கலாசார அமைச்சு அண்மையில் வழங்கியுள் ளது. (உ-102)

### உதைபந்தாட்ட மத்தியஸ்த்தர் கூட்டம்

(கந்தரோடை)

வலிகாமம் லீக் உதைபந்தாட் டக் கழகத்தின் மத்தியஸ்த்தர்களுக் கான கூட்டம் மற்றும் செயற்குழுக் கூட்டம் ஆகியன எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு மருதனார்மடம் இரா மநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கழகத் தலைவர் சு.புண்ணிய சீலன் தலைமையில் இடம்பெற வுள்ள மேற்படி கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன் உட்பட மற்றும் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

மாவீரர் தினத்தை முன்னிட்டு நடாத்தப்படவுள்ள உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் தொடர்பான முக் கிய தீர்மானங்கள் மேற்படி கூட்டத் தின் போது எடுக்கப்படவுள்ளதால், கழகத்தின் அனைத்து அங்கத்தவர் களையும் தவறாது கலந்துகொள் ளுமாறு கழகச் செயலாளர் மு.நட ராஜா கேட்டுள்ளார். (உ-103)

### தொடர்புகொள்க!

கீழே பெயர் குறிப்பிடப்பட்டவர் களை தம்முடன் தொடர்புகொள் ளுமாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கேட்டுள்ளது.

★ திருமதி உதயகுமார் சந்திர வதனி - கற்கோவளம் அகதிகள் முகாம், பருத்தித்துறை.

★ திருமதி தங்கலிங்கம் கண்ணகிதேவி - கற்கோவளம் அகதிகள் முகாம், பருத்தித்துறை.

★ திருமதி யோசப் ஆனந்த ராணி - முதலாம் குறுக்குத்தெரு, குருநகர்.

★ திருமதி சேகர் பற்றிமா - 52, தண்ணீர் தாங்கி வீதி, குருநகர்.

★ திருமதி குணபாலசிங்கம் மனோன்மணி - புனித சூசையப்பர் கோவிலடி, புலோலி தெற்கு, பருத் தித்துறை.

★ எஸ்.ஏ.டோமினிக் - 957 16, வளன்புரம், கொழும்புத்துறை. (உ)

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(வடலியடைப்பு)

ஊர்காவற்றுறை பிரதேச ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு உதவி அரச அதிபர் ஜே. எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (தி-21)

### வைத்தியசாலைக்கு மலசலகூடம்

சாவகச்சேரி மாவட்ட வைத்திய சாலைக்கு இரு மலசல கூடங்களை அமைத்துக் கொடுக்க யுனிசெவ் நிறுவனம் முன்வந்துள்ளது.

மேற்படி வைத்தியசாலையின் அடிப்படை வசதியீனங்களை சுட்டிக் காட்டியதை அடுத்தே இவ் இரு மலசல கூடங்களையும் அமைத்துக் கொடுக்க யுனிசெவ் நிறுவனம் நட வடிக்கை எடுத்துள்ளது. (தி-4)

## வடக்கு–கிழக்கு அபிவிருத்திக்கு நெதர்லாந்து 38 இலட்சம் யூரோ

(கொழும்பு)

நாட்டின் சமாதான நடவடிக்கை களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும், பொருளாதார அபிவி ருத்தியை மேம்படுத்தும் 3திட்டங் களுக்கு உதவும் வகையிலும், நெதர்லாந்து அரசாங்கம் 38 இலட் சம் யூரோ உதவியை இலங்கைக்கு வழங்க முன்வந்துள்ளது.

இதற்கமைய நெதர்லாந்து நாட்டு அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு அமைச்சர் திருமதி டயந் வன்சன் ஹோகன் எதிர்வரும் நவம்பர் மாதம் 3ஆம் திகதி இலங்கைக் கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு திருகோணமலையில் இதற்கான ஒப் பந்தம் ஒன்றில் கைச்சாத்திடவுள் ளார்.

நவம்பர் மாதம் 5ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக் கும் இவர் எதிர்க்கட்சித் தலைவர் கள் மற்றும்அமைச்சர்கள், உதவி வழங்கும் அமைப்புக்களின் பிரதி நிதிகள் ஆகியோரைச் சந்தித்து நாட்டின் அரசியல் நிலைமை பற்றி யும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடவுள் ளார்.

இதேவேளை, நெதர்லாந்து வழங்கவிருக்கும் 38 இலட்சம் யூரோக களில் 30 இலட்சம் யூரோக்கள் வடக்கு- கிழக்கு புனர்வாழ்வு, சமூக அபிவிருத்தித் திட்டத்திற்கும், 4இல்ட்சம் யூரோக்கள் வர்த்தக கைத்தொழில் சமாஜம் மேற்கொள் ளும் நடவடிக்கைகளுக்கும் மீதி 4 இலட்சம் யூரோக்கள் மனிதாபிமான முகவர் நிலையங்களின் ஒருங் கிணைந்த அமைப்பின் திட்டங் களுக்கும் செலவிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மனிதாபிமான முகவர் நிலையங்களின் நடவடிக் கைகள் மூலம், நாட்டின் சிவில் சமூ கத்தவரின் வாழ்க்கைத்தரம் அபிவி ருத்தி செய்யப்படுவது மாத்திரமல் லாமல், சமாதான மற்றும் அபிவி ருத்தித்திட்டங்களும் முன்னெடுத்துச் செல்லப்படவுள்ளதாக மனிதாபிமான முகவர் நிலையங்களின் ஒருங்கி ணைந்த அமைப்புத் தெரிவித்துள் ளது. (தி-60,10)

## நிக்கொட் நிதியுதவியுடன் மாதிரிக் கிராமம் அமைப்பு

(கொழும்பு)

நிக்கொட் நிறுவனத்தின் நிதியு தவியுடன் ஏறாவூர் அரட்டையான் குடாப் பிரதேசத்தில் 50 வீடுகளைக் கொண்ட புதிய மாதிரிக்கிராமம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

வீடமைப்பும் பிரதி அமைச்சர் வசீர் சேகுதாவுத்தின் வேண்டு கோளுக்கு இணங்கவே நிக்கொட் நிறுவனம் ஒரு கோடி ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற வன் செயல்களினால் பாதிக்கப்பட்ட 50 தமிழ், முஸ்லிம் குடும்பங்களே இக் கிராமத்தில் குடியமர்த்தப்பட வுள்ளனர். (தி-60)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் 5 குடிநீர்த் திட்டங்கள்

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவியுடன், மட்டக்களப்பு மாவட்ட 5 பிரதேச செயலர் பிரிவுகளில் பாரிய குடிநீர்த் திட்டங்கள் அமுல் படுத்தப்படவுள்ளன.

தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் இரண்டாம் தர நகர உத்தியோகபூர்வ நீர் விநி யோக சுகாதரத் திட்டத்தின் கீழ் இத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வீடமைப்பு பிரதி அமைச்சர் வசீர் சேகுதாவுத் தெரிவித்துள்ளார்.

இவ் நீர் விநியோகத் திட்டத்தின் கீழ் 2 இலட்சத்து 70 ஆயிரம் பேர் நன்மையடையவுள்ளனர்.

மண்முனைப்பற்று, ஏறாவூர் நகர், மட்டக்களப்பு, காத்தான் குடி, ஏறாவூர்ப் பற்று ஆகிய பிரதேசங் களுக்கே நீர் விநியோகிக்கப்படவுள் ளது.

(தி-60)

### கிளிநொச்சி மாவட்டத்தில்

## வீட்டு வசதிக் கடன் திட்டம் 100 மில்லியன் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் வீட மைப்புக் கடன்வசதிகளை வழங்கு வதற்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு 100 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

செலான் வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி ஆகியன ஊடாக இக்கடன் வசதித் திட்டம் அமுல்படுத்தப்பட வுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு அடுத்தபடியாக முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் இக் கடன் வழங் கும் திட்டம் அமுல்படுத்தப்படவுள் ளது.

(உ-4)

# மலையக மக்கள் தனி மாநிலம் கோரவில்லை தமது உரிமைகளையே கேட்கிறார்கள்

## புலிகளுடனான சந்திப்பின் பின் சந்திரசேகரன் கருத்து

(லண்டன்)

சிறுபான்மையினத்தவரான நாங்கள் தனியான ஓர் அலகு வேண்



டும் அல்லது தனியான ஓர் மாநிலம வேண்டும் எனக் கேட்கவில்லை.

அகதிகள் போல அரசியல் உரிமையற்றவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.எனவே,எங்களுக்கு உரிமை வேண்டும் என்றே அரசைக் கேட்கின்றோம்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான பெ.சந்திரசேகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்த அமைச்சர் சந்திரசேகரன், அச் சந்திப்புக் குறித்து பி.பி.சி. தமிழ் சேவைக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், அரசிற்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையில், முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் முஸ்லிம் பிரதிநிதிகளும் கலந்துகொள்ள வேண்டும் என முஸ்லிம் மக்கள் கோரி வருவது போல, மலையக மக்கள் சார்பில் நாங்கள் பிரதிநிதித்துவம் கேட்க மாட்டோம். மாறாக புலிகள் தயாரித்துள்ள இடைக்கால நிர்வாக சபை பற்றிய திட்டவரைபில் மலையக மக்களின் உரிமையும் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். அவர்களின் அபிலாஷைகளும் பூர்த்தி செய்யப்படவேண்டும்.

இதேவேளை,முஸ்லிம் மக்களின் தனித்தரப்புக்கோரிக்கை அதாவது சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கலந்து கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை தவறானதாக நான் கூறவில்லை.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அவர்கள் வாழ்ந்து வருவதால் அவர்களின் கோரிக்கைகள் ஒரு வகையில் நியாயமானதாகவும் இருக்கலாம்.

ஆனால், அடிப்படையிலே சிறுபான்மையினத்தவரான எமக்கு ஏற்படும் பிரச்சினைகள் எல்லாம் ஒன்றுதான். வடக்கு-கிழக்கு மாகாணத் தமிழ் மக்களும் சிறுபான்மையினத்தவர்தான்,

அதேவேளை, அங்கு வாழும் முஸ்லிம்களும் சிறுபான்மையினர் தான் ஏன்? மலையக மக்களும் சிறுபான்மையினத்தவர் தான்.

இந்தச் சிறுபான்மை இனத்தவர்கள நண்டகாலமாக பெருமபான்மையினத்தவர்களால் ஆளப்பட்டு வருகிறார்கள். இதனால் சிறுபான்மையினத்தவரின் உரிமைகள் பறிபோகின்ற அபாயம் நெருங்கி வருகிறது.

எனவே, சிறுபான்மையினத்தவர்களாகிய எமக்கு உரிமை வேண்டும் என்றே ஆசை. மீண்டும் மீண்டும் கேட்கின்றோம் என்றார்.

(உ-62,10)

## ஒரே சூலில் பிறந்த 4 சிசுக்களின் ஆயுள் 5 நாட்களே

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் அண்மையில் ஒரேசூலில் பிறந்த 4 சிசுக்களும் இறந்துள்ளன.

கடந்த 22ம் திகதியன்று மட்டகளப்பு பாவற்கொடிச் சேனையைச் சேர்ந்த கதிர்காமப் போடி மலர் என்ற பெண்மணி மேற்படி 4சிசுக்களையும் பிரசவித்திருந்தார்.

4 சிசுக்களும் நிறைகுறைவாகவும் ஆரோக்கியம் இல்லாமலும் இருந்த காரணத்தால் அவசரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு 5நாட்களே உயிர் வாழ்ந்த நிலையில் நேற்று முன்தினம் அடுத்தடுத்து உயிரிழந்துள்ளன. (உ-18)

## உதவி பொலிஸ் அதிகாரி குத்திக்கொலை

(கொழும்பு)

கல்கிசை பொலிஸ் பகுதியைச் சேர்ந்த உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை 29வயதான நவின் குமார எகொட கெதர என்ற உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் அத்திடிய என்ற இடத்தில் வைத்து கத்தயால் குத்திக்கொல்லப்பட்டார். அம்பாறை சிறப்பு அதிரடிப் படையைச் சேர்ந்தவர் இந்த பொலிஸ் அதிகாரி என்று தெரியவருகிறது. புலன் விசாரணைகள் தொடர்கின்றன.(பி)

## இலங்கை உள்ளிட்ட 6 நாடுகள் சமாதான முன் முயற்சிகள் குறித்து பரஸ்பரம் அனுபவப் பரிமாற்றம்

(கொழும்பு)

நாடொன்றில் ஆயுத மோதல்கள் இடம்பெறும பட்சத்தில் அவற்றை முறியடித்து வெற்றிகரமாக சமாதான முன்முயற்சிகளை முன்னெடுப்பது குறித்த அனுபவங்களைத் தமிடையே பரஸ்பரம் பரிமாறிக் கொள்வதற்கு இலங்கை உட்பட 6 நாடுகள் இணக்கம் தெரிவித்துள்ளன.

தமது சமாதான முயற்சிகளின் அனுபவங்கள் குறித்து இலங்கை, பலஸ்தனம், இஸ்ரேல், மெக்ஸிக்கோ, வடஅயர்லாந்து மற்றும் கொரிய தீபகற்பம் ஆகிய நாடுகளே பரஸ்பரம் தம்முள் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ளவுள்ளன.

இந்நாடுகள் அனைத்திலும் முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதானத் தீர்வு முயற்சிகளுக்கு மேலும் வலுவூட்டும் ஒரு முயற்சியாகவே இப் புதிய தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஆயுத மோதல்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற முயற்சிகள் குறித்து ஆராயும் சர்வதேச மாநாடொன்று இடம் பெற்றபோதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இம் மாநாட்டில் இலஙகை சார்பாக கலாநிதி கொப்பிறி குணதிலகக, மன்னார் மறைமாவட்ட ஆயர் 'அதிவண. இராயப்பு ஜோசப்பு உட்பட மேலும் 4 பிரதிநிதிகளும் மேற்படி 5 நாடுகளைச் சேர்ந்த 40 பிரதிநிதிகள் உட்பட ஜப்பான் பிரதிநிதிகள் 60 பேரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (உ-18)

## ஜனாதிபதியின் உத்தரவால் படைத்தரப்பில் குழப்பம்

### ஒஸ்ரின் ஒத்துக்கொள்கிறார்

(கொழும்பு)

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் ட்ரைகேவ் ரெலிவ்சனின் யோசனைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் எதனையும் பின்பற்ற வேண்டாம் என இலங்கை முப்படைத் தளபதிகளுக்கும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ள இந்த நிலையிலும், முப்படையினரும் கண்காணிப்புக்குழுவின் ஏனைய பிரதிநிதிகளுடன் இணைந்து செயற்படுவதற்கு எந்தவிதமான தடையும் இல்லை யென பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது விடயம் குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் ரெலிவ்சன் பக்கச் சார்ப்பாகச் செயற்படுவதால், அவரது பணிப்புரைகளையோ அன்றி ஆலோசனைகளையோ பின்பற்ற வேண்டாம் என்று முப்படைகளின் தளபதிகளுக்கு ஜனாதிபதி சந்திரிகா எழுத்து மூலம் உத்தரவிட்டுள்ளார்.

இந்த நிலையில், படைத்தரப்பினர் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருடன் இணைந்து செயற்படுவதில் குழப்பமடைந்துள்ளனர். இதில் குழம்புவதற்கு எந்த வித விடயமும் இல்லை.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவரின் ஆலோசனைகள் மற்றும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதற்கு மட்டுமே தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆயினும், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மற்றைய பிரதிநிதிகளின் ஆலோசனைகளைப் பின்பற்றுவதற்குத் தடையேதும் இல்லை.

அதேவேளை, ரெலிவ்சன் தொடர்பான ஜனாதிபதியின் தடை உத்தரவால் எமது பணிகளில் எதுவித பாதிப்பும் ஏற்படாதவாறு செயற்படுவோம் எனக் குறிப்பிட்டுள்ளார். (உ-18)



திருநெல்வேலி சிவசக்தி முன்பள்ளி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வில் ஒருகாட்சி.



யுனிசெவ் மற்றும் சிறுவர் பாதுகப்பு நிதியம் ஆகியவற்றின் அனுசரனையுடன்,யாழ். மாவட்ட சிறுவர் கழகங்களின் இணையம் அண்மையில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நடத்திய மிதிவெடி விழிப்புணர்வுக் கண்காட்சியின் போது எடுக்கப்பட்ட படம். (படம்:நவாலி நிருபர்)

## சூரியனில் கரும் புள்ளிகள் பூமிக்குப் பெரும் ஆபத்து

### வரும் என வானிலையாளர் எச்சரிக்கை

(இந்தியா)

இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய புள்ளி எனக் கணிக்கப்படும் மிகப்பெரிய கரும் புள்ளித் தொகுதியொன்று சூரியனில் உருவாகியிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் கொடைக்கானல் வானிலை ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த பி.எஸ்.எம்.அலிம் இது குறித்து கருத்து தெரிவிக்கையில்,

நம்மை ஆளுகின்ற சூரியனின் காந்தப்புலம் காரணமாகவே கரும் புள்ளிகள் உருவாகின்றன. இவை 11ஆண்டு காலத்திற்கு ஒரு முறை உச்சமும் நீட்சியும் அடைவதே வழமையான செயற்பாடு.

ஆனால், இம்முறை உச்ச நிலையை அடைந்துள்ள இக் கரும் புள்ளிகளின் எண்ணிக்கை 200 முதல் 250 வரை அதிகரித்துள்ளன.

இந்த நிலையில், தற்போது உருவாகியுள்ள இக்கரும்புள்ளித் தொகுதியின் விட்டம் பூமியின் விட்டத்தைப் போன்று 2 ஆயிரத்து 25 மடங்கு பெரிதாகவும் உள்ளது.

அத்துடன், அதிகரித்துள்ள இப் புள்ளிகளால் எமது புவியில் பல பாரிய மாற்றங்கள் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, உலக மழை வீழ்ச்சி, பயிர் விளைச்சல் மற்றும் பொருளாதார ஏற்ற இறக்கம் போன்றவற்றிலும் இது மிகவும் செல்வாக்குச் செலுத்தும் எனக் குறிப்பிட்டார். (உ-18)

## வடக்கு-கிழக்கில் புதிய முதலீடுகளை செய்ய இந்திய முதலீட்டாளர் ஆர்வம்

(கொழும்பு)

இந்தியா- இலங்கைக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தத்தினையடுத்து வடக்கு-கிழக்கு மாகாணத்தில் புதிய முதலீடுகளை மேற்கொள்ளவும் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கும் இந்திய முதலீட்டாளர்கள் தயாராகி வருவதாக வர்த்தக கைத்தொழில் சம்மேளனங்களின் தலைவர் நிகால் அபயசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த 19ஆம்திகதி இந்தியாவிற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இந்தியப் பிரதமர் வாஜ்பாயும் பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளதாகவும்,

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் பாரம்பரியமற்ற பொருட்களையும் இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்ய முடியும் எனவும் தெரிவித்த நிகால் அபயசேகர,

இவ் ஒப்பந்தத்தின் இலட்சியத்தை அடைவதற்கென இலங்கை வர்த்தகர்களுக்கும் கைத்தொழிலாளர்களுக்கும் குறைந்த வட்டியில கடன் வசதிகள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(பி-60,10)

## அயல்வீட்டு நீரைக் கட்டணமின்றி பயன்படுத்துவது சட்டப்படி குற்றம்

(கொழும்பு)

இலஙகையில் உள்ள அனைத்து நீர்வளங்களும் தனியாருக்கு விற்பனை செய்யப்படவுள்ளதாக அரசு தெரிவித்திருப்பதாக சிங்கள வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

அரசாங்கத்தின் இந் நீர் விற்பனைத் திட்டத்தின்படி இன்னும் 5 வருடங்களுக்கு மாத்திரமே நீர் விநியோகம் அரசாங்கக் கட்டுப்பாட்டில் இருக்கும்.

இதனால், நீர் விநியோக வடிகால் அமைப்புச் சபை மற்றும் உள்ளூராட்சிச் சபை என்பன நீர் விநியோகத்தில் செலுத்திவந்துள்ள அதிகாரம் செயலிழக்கவுள்ளது.

இதன் பின்னர் எந்தவொரு நீர் நிலையில் இருந்து பெறப்படும் நீருக்கும் பணம் செலுத்தவேண்டியிருக்கும். விவசாயிகளுக்கு குறிப்பாக நெற்செய்கையாளர்களுக்கு இது பொருந்தும்.

இத திட்டத்தின்படி வீட்டுக் கிணறு ஒன்றிலிருந்து பெறப்படும் நீரை அந்த வீட்டு உரிமையாளரே பெற முடியும். அயல் வீட்டுக்காரர் அதனைப் பயன்படுத்த வேண்டுமானால் பணம் செலுத்தவேண்டும்.

அவ்வாறு பணம் செலுத்தாது நீரைப் பெறுபவர்கள் 5 ஆயிரம் ரூபா முதல் 20 ஆயிரம் ரூபா வரை அபராதப் பணம் செலுத்தவேண்டும் என அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-10)

### தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர்

## புலிகளின் மாற்று யோசனைகள் பற்றி தென்னிலங்கையில் விளக்கமளிப்பர்

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக சபை குறித்த யோசன்னைகளை, தமிழீழ விடுதலைப் புலிகள் அரசாங்கத்திடம் சமர்ப்பித்ததும் ஏனையமுக்கியமான தென்பகுதி அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தையினை நடத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆரம்பத்தில் உத்தியோக பற்றற்ற முறையில் நடைபெறும், இப் பேச்சு வார்த்தையினை பின்னர் உத்தியோக பூர்வமாக நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும் எனக் கூறப்படுகிறது.

இத்தகைய பேச்சுவார்த்தைகள் மூலம், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த சிங்கள அரசியல் கட்சிகளுக்கு இடைக்கால நிர்வாகம் பற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் யோசனைகளை விளக்கிக் கூறமுடியும் என்று கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

(உ-60,10)

## குடாநாட்டு நீர்வள அபிவிருத்தி ஆய்வரங்கு இன்று செயலகத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நன்னீராக்கல் திட்டத்தின் ஒரு பகுதியான தொண்டைமானாறு உவர்நீர்த் தடுப்பு அணைத் திட்டத்தின் தற்போதைய நிலையை மதிப்பீடுசெய்து தொடர் நடவடிக்கைக்கான முன்மொழிவுகளை இனங்காண்பதற்காக ஒரு குறுகியகால ஆய்வினை மேற்கொள்வதற்கு உலக வங்கி சிபார்சு செய்துள்ளது.

இவ் ஆய்விற்கான விடயங்களை வரையறை செய்வதற்கு வசதியாக இத்திட்டத்தின் பங்காளிகளினதும், சமூகத்தினதும், நிபுணர்களினதும் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கான ஆயவரங்கு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.00மணி தொடக்கம் பி.ப.5.15வரை யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 3 உவர்நீர்த் தடுப்பு அணைகளும் 17 குளங்களும் தற்போது நியாப் அமைப்பினால் புனரமைப்பு செய்யப்படுகின்றன. அவற்றில் செய்து முடிக்கப்பட்ட திட்டங்களின் நன்மைகளை நேரடியாகவே மக்கள் உணரத் தொடங்கியுள்ளார்கள்.

இன்னும் 7 உவர்நீர்த் தடுப்பு அணைகளும் 13குளங்களும் 1வடிவாய்க்காலும் புனரமைப்பதற்கான திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இரண்டாவது கட்ட நியாப் திட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் உவர்நீர்த் தடுப்பு அணைகள், குளங்கள், வடிவாய்க்கால் புனரமைப்பதற்கு கூடிய கவனம் செலுத்தப்படவுள்ளது.

இவற்றினை மக்களின் தேவையினை அறிந்து செயல்படுத்துவதற்காக நியாப் ஆய்வரங்குகளையும், ஆய்வுகளையும் செய்து வருகின்றது.

பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் அரசாங்க அதிபரும் இவைகள் திறம்பட செயற்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். இத்திட்டத்திற்கான நிதியுதவி வழங்கும் உலக வங்கியின் ஆலோசகர் எந்திரி நிகால் பெர்ணான்டோ அடிக்கடி இம் மாவட்டத்திற்கு வருகைதந்து திட்டம் வகுப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் தகுந்த ஆலோசனைகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(உ)

### இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரம்

## இலங்கை இனவாதம் சர்வதேச சமூகத்திற்கே சவால் விடுக்கிறது

### பாராளுமன்ற விவகார அமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் இன்று தோன்றியிருககின்ற சமாதானச் சூழ்நிலையை நிலைநிறுத்துவதில் சர்வதேச சமூகமே ஒரு மனதாகப் பாடுபட்டு வருகின்ற இந்தச் சந்தர்ப்பத்திலே, இவறுக்கெல்லாம் சவால் விடுக்கும்



வகையில் செயற்பட்டுவரும் ஒரே ஒரு சக்தி தென்னிலங்கை இனவாதமே என்று குற்றம்சாட்டினார் பாராளுமன்ற விவகார அலுவல்கள் அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர்.

பாராளுமன்ற விவகார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் நேற்றையதினம் யாழ்.செயலகத்தில் இடம்பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் அலுவலகங்களில் கடமையாற்றுவோர்க்கான பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்டு ஆரம்ப உரையாற்றுகையிலேயே அஸ்வர் இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ்.அரசாங்க அதிபர் எஸ்.பத்மநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், இந்து கலாசார விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் மற்றும் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உட்பட யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் அலுவலக செயலாளர்கள், இணைப்பாளர்கள், மக்கள் தொடர்பாளாகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

அமைச்சர் அஸ்வர் அங்கு தொடர்ந்தும் கருத்துக் கூறுகையில்,

அரசியல், கல்வி, சமூக மேம்பாடுகளில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஆகியோர் சம உரிமை உடையவர்கள். இதுவிடயம் ஏட்டளவில் மட்டுமே கைக்கொள்ளப்பட்டதால் ஏற்பட்டதே இந்த 20வருட கால யுத்தம்.

இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதில் பிரதமர் காட்டி வருகின்ற அர்ப்பணிப்புடன் கூடிய சிரத்தையை நாம் மறந்துவிடக் கூடாது.

தென்னிலங்கையில் உள்ள மக்கள் விடுதலை முன்னணி, சிஹல உறுமய ஆகியன சமாதானத்தை குழப்ப கங்கணங்கட்டி நிற்கின்றன. இதனை நாம் முறியடிக்க வேண்டும்.

தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்ற பேதம் பாராது ஒன்றுபட்டு சமாதானத்திற்காக குரல கொடுக்க வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால் பின்னர் துன்பப்படவேண்டி நேரிடும்.

யுத்த வழிமுறையைத் தேர்ந்தெடுத்த எவருமே வென்றதாக வரல்லாறு இல்லை. உலக சர்வாதிகாரி ஹிட்லரின் வரலாறு இதற்குத் தக்க பாடமாக அமைகிறது. இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு இனமும் தன்னாட்சி உரிமைமிக்கது. ஒருவரது உரிமையை இன்னொருவர் கையில் எடுப்பதால் ஏற்பட்டதே 20வருட நீண்ட போர்.

எனவே, அவர்களுக்குள்ள உரிமையை அவரவர் அனுபவிக்க வழிவகை செய்யப்படவேண்டும்.

இலங்கையில் தற்போதுள்ள அரசியல் அமைப்பு, தேர்தல்முறை என்பன எவரையும் பாராளுமன்றம் அழைத்துவரும் வல்லமை மிக்கனவாய் திகழ்கின்றன.

இவ்வாறு பாராளுமன்றக் கதிரைகளில் அமர்பவர்கள், மக்களின் தேவைகளை உணர்ந்து செயற்பட வேண்டும். சேவையாளர்கள் எவரையும் மக்கள் புறம் தள்ளியதாக வரலாறு இல்லை என்றார்.(உ-4)

## கொலைக் குற்றவாளிகள் 17 பேர் மேன்முறையீடு

(கொழும்பு)

ஐந்து படுகொலை வழக்குகளில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட 17 பிரதிவாதிகள் கொழும்பு உயர்நீதிமன்றில் மேன் முறையீட்டுகளை சமர்ப்பித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கிருஷாந்தி குமாரசாமி படுகொலை, கொப்பந்தறையில் அதிக எண்ணிக்கையானோர் படுகொலை செய்யப்பட்டமை, பிந்துனுவெவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டவர்களை படுகொலை செய்தமை உட்பட ஐந்து படுகொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களே மேன்முறையீட்டு விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளனர்.

அவர்கள் தமது விண்ணப்பங்களில் மேல்நீதி மன்றத்தால் தமக்கு வழங்கப்பட்ட தீர்ப்பை தள்ளுபடி செய்யுமபடி கோரியுள்ளனர். இதனை அடுத்து பிரதம நீதியரசர் சரத் என் சில்வா உயர் நீதிமன்றத்தில் 5நீதி அரசர்களைக் கொண்ட குழுவை நியமித்து இந்த மேன் முறையீடுகளை இயன்றளவு விசாரணைக்கு எடுக்க தீர்மானித்துள்ளார்.

(உ-60,10)

### அகில இலங்கை வலைப் பந்தாட்டம்

## கன்னிப் போட்டியில் வெற்றிவாகை சூடிவந்தது யாழ்.கலப்பு அணி

இலங்கை வலைப்பந்தாட்டச சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட 2003 ஆம் ஆண்டிற்கான தேசிய மட்ட வலைப்பந்தாட்டப் போட்டிகளில் யாழ்.வலைப்பந்தாட்ட கலப்பு அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துள்ளது.

மேற்படி யாழ்.மாவட்டக் கலப்பு அணி தனது அறிமுகப் போட்டியிலேயே இந்த வெற்றியைத் தட்டிக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் பதிவுசெய்யப்பட்ட மாவட்டங்களின் அணிகளும் பதிவு செய்யப்பட்ட கழக அணிகளுக்கும் இடையில் கடந்த சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களும் அனுராதபுரம மத்திய விளையாட்டு அரங்கில், நடைபெற்ற இப் போட்டிகளில் யாழ்.மாவட்ட பெண்கள் வலைப்பந்தாட்ட அணியும முதல் தடவையாக யாழ்.மாவட்ட கலப்பு வலைப்பந்தாட்ட அணியும் கலந்து கொண்டன.

இதில் யாழ்.மாவட்ட கலப்பு வலைப்பந்தாட்ட அணியினர் இறுதிப் போட்டியில் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய அணியை 11:8 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிகொண்டு சம்பியன் கிண்ணத்தை வெற்றிகொண்டனர்.

இப் போட்டிகளில் யாழ்.மாவட்ட பெண்கள் வலைப்பந்தாட்ட அணியும் சிறப்பாக விளையாடி கால் இறுதிப் போட்டிவரை முன்னேறி இருந்தது எனினும், கால் இறுதிப் போட்டியில் கொழும்பு மாவட்ட அணியிடம் 28:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் தோல்வியைத் தழுவிக்கொண்டது.

யாழ்.மாவட்ட கலப்பு வலைப்பநதாட்ட அணிக்கும் கொழும்பு கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய அணிக்கும் இடையிலான இறுதிப் போட்டி மிகவும் விறுவிறுப்பாக அமைந்திருந்தது. யாழ்.மாவட்ட அணியினர் இறுதி நேரத்தில் மேலும் சிறப்பாக விளையாடி தமது வெற்றி வாய்ப்பை உறுதிப்படுத்திக் கொண்டனர்.

இப் போட்டியில் வெற்றிபெற்ற யாழ்.மாவட்ட கலப்பு வலைப்பந்தாட்ட அணியின் வீர, வீராங்கனைகளின் திறமைகளை பலரும் பாராட்டியதுடன், தமது வாழ்த்துக்களையும் தெரிவித்திருந்தனர்.

இப் போட்டியின இடைவேளை வரையிலுமான நேரத்தில் யாழ்மாவட்ட கலப்பு வலைப்பந்தாட்ட அணியினர் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய அணியை விட ஒரு புள்ளிகள கூடுதலாகப் பெற்று 5:4என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னணியில் இருந்தனர். எனினும் இடைவேளை நேரத்தின் பின்னர் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய அணியினர் சிறப்பாக விளையாடி யாழ்.மாவட்ட அணியை விட புள்ளிகள் அடிப்படையில் முன்னுக்கு வந்தனர்.

ஆனால், போட்டியின் முடிவு நேரத்திற்கு முன்னராக அடுத்தடுத்து புள்ளிகளைப் பெறத்தொடங்கிய யாழ்.மாவட்ட அணியினர், இறுதியில் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய அணியை விட முன்னணிக்கு வந்ததுடன், போட்டி முடிவில் 11:8என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றியை தமதாக்கிக்கொண்டனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

(உ-68)

## அரசியல் இலாபம் கருதிச் செயற்படும் அவசியம் எதுவும் எனக்கு இல்லை

### அமைச்சர் ஜெயலத் செயலகத்தில் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

அரசியல் இலாபம் கருதிச் செயற்பட வேண்டிய எந்தவித தேவையும் எனக்கில்லை. கடந்த 20 ஆண்டுகால யுத்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள யாழ்.குடாநாட்டு மக்களுக்கான புனர்வாழ்வு உதவிகள் சீரிய முறையில் வழங்கப்படவேண்டும் என்பதற்காகவே நான் முற்று முழுதாகச் செயற்பட்டு வருகிறேன் என புனர்வாழ்வு புனரமைப்பு, மீள் குடியமர்த்துகை அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ்.குடாநாடடுக்கு வருகைதந்த டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன 'சகனிய' கைத்தொழில் அபிவிருத்திக் கடன் வழங்கும் திட்டத்தை யாழ்.செயலகத்தில் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

யாழ்.குடாநாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளால் பல்வேறான அழிவுகள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் முகமாகவே நான் இத்தகையதோர் கடன்வழங்கும் திட்டம் மற்றும் உதவிப்பணிகள் ஆகியவற்றில் ஈடுபட்டு வருகின்றேன்.

எனது இவ்வாறான செயற்பாடுகளைச் சிலர் விரோதமான கண்ணோட்டத்துடனேயே பார்க்கின்றனர்.

அத்துடன் தற்போது சமாதானம் ஏற்பட்டு விட்டது என எவரும் எண்ணிவிடக்கூடாது. தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ளது வெறும் யுத்த நிறுத்தம் மட்டுமே. இன்னும் நிரந்தர சமாதானமோ அன்றி நிரந்தரத் தீர்வுகளோ எதுவும் ஏற்படவில்லை.

தற்போதுள்ள யுத்தநிறுத்தத்தை நிரந்தர சமாதானமாக நிலை நிறுத்தி இப் பிரதேசத்தை மேம்பாடடையச் செய்யும் நோக்கிலேயே நான் இக் கடன் திட்டத்தை ஆரம்பித்து வைக்கிறேன்.

இத்தகைய கடன்களைக் கைத்தொழில் முயற்சியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் ஆகியோர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நெஷனல் வங்கி, செலான் வங்கி, கொமஷல் வங்கி, சம்பத் வங்கி மற்றும் அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் ஆகியவற்றினூடாக பெறுவதற்குரிய வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேவேளை, குறைந்த வட்டியிலான இக் கடன்உதவியை வழங்குவதற்கு கைத்தொழில் முன்னேற்ற அபிவிருத்திச் சபை 35மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கி உள்ளது என ஜெயலத் ஜெயவர்த்தன மேலும்குறிப்பிட்டார்.

யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் புனர்வாழ்வு அமைச்சின் மேலதிக செயலாளர்களான எஸ்.சண்முகலிங்கம், டட்லி சேனநாயக்க, புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் அன்ரன் அல்பிறேட் மற்றும் கைத்தொழில் அபிவிருத்திக் கடன் வழங்கல் திட்டத்தின் தலைவர் பந்துல பெரேரோ ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-4)

## முத்தமிழ் விழா

யா/வைத்தீஸ்வராக் கல்லூரியின் தமிழ்ப் பேரவையினர் நடாத்தும் முத்தமிழ் விழா நாளை புதன் கிழமை மு.ப.9.30மணிக்கு கல்லூரியின் விவேகானந்தர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செல்லையா திருநாவுக்கரசும், சிறப்பு விருந்தினராக யாழ். கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.எஸ். தங்கராசாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ-10)

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சா-த)

## மாதிரிப் பரீட்சை - 2003

**பாடம்: சைவ நெறி நேரம்: 3 மணி**

**ஆக்கம்: தி.கிருபாகரன்(ஆசிரியர்)**

(யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்)

பகுதி Iல் எல்லா வினாக்களுக்கும் பகுதி IIல் ஐந்து வினாக்களுக்கும் விடை தருக

## பகுதி-I

**சரியான விடையைத் தெரிவு செய்க**

01. ''தனக்கு மேல் ஒரு தலைவன் இல்லாதவன்'' என்ற பொருளில் அமைந்துள்ள திருநாமம்
1.விநாயகன் 2. கணபதி 3. விக்னேஸ்வரன் 4. பிள்ளையார்

02. செவிவழி மரபில் வந்தது என்பதைக் குறிப்பது
1.சுருதி. 2.ஆகமம் 3. இதிகாசம் 4. புராணம்

03. காயத்திரி மந்திரம் இடம்பெறும் வேதம்
1. இருக்கு 2. யசுர் 3. சாமம் 4. அதர்வணம்

04. இறைவனுக்கு ஆயிரம் பெயர் சொல்லி அர்ச்சித்தல்
1. அஸ்டோத்திரநாமம் 2. சகஸ்ரநாமம் 3. அஸ்டகம் 4. பஞ்சரத்தினம்

05. திருக்கேதீஸ்வரத்தில் உள்ள தீர்த்தம்
1. பாபநாசம் 2.பாலாவி 3. மாணிக்ககங்கை 4.மாயவனாறு

06. இறைவனுக்கு உள்ளத்தில் கோயில் கட்டிய அடியார்
1. திருநாவுக்கரசர் 2. சிறுத்தொண்டர் 3. பூசலார் 4. மானக்கஞ்சாநர்

07. பராபரக்கண்ணி பாடியவர்
1. கபிலதேவர் 2. கண்ணப்பர் 3. தாயுமானவர் 4. இராமலிங்க சுவாமிகள்

08. பினவருவனவற்றுள் சைவசமய வாழ்வுடன் இணைந்த கலைகள் அடங்கும் தொகுதி
1. பண்ணிசை, புராணபடனம், மாலைகட்டல் 2. தொலைக்காட்சி,திரைப்படம், அச்சுக்கலை
3. தையல்,சமையல்,நடனம் 4. கோலம்போடுதல்,கும்மி, பொப்பிசை

09.திருஞானசம்பந்தர் திருமறைக்காட்டிலே திருக்கதவு மூடுவதற்கு பாடிய பதிகம்
1. துணிவளர் திங்கள் 2. மட்டிட்டபுன்னை 3. சதுரம் மறை 4. காதலாகி

10. பெரிய புராணம் அரங்கேற்றப்பட்ட தலம்
1. திருவண்ணாமலை 2. சிதம்பரம் 3. தஞ்சைப்பெரியகோயில் 4. திருவீழிமிழலை

11. மணிவாசகரின் குருபூசைத்தினம்
1.ஆனிமகம் 2. ஆடிச்சுவாதி 3. சித்திரைச் சதயம் 4. வைகாசி மூலம்

12. அன்பும் சிவமும் இரண்டென்பர்
1. அறிவுடையோர் 2. கற்றவர் 3. அறிவிலார் 4. வேதாந்திகள்

13. எம்பெருமான் காட்சிளித்து திருஞான சம்பந்தருக்கு கொடுத்தருளிய தீட்சை
1. நயன தீட்சை 2. வாசகதீட்சை 3. திருவடிதீட்சை 4. மானசதீட்சை

14. மாசிமாதத் தேய்பிறை பதினான்காம் நாளில் அனுட்டிக்கப்படும் விரதம்
1. மகாசிவராத்திரி எனப்படும் 2. விநாயக சதுர்த்தி எனப்படும்
3. மகாமகம் எனப்படும் 4. மாசிமகம் எனப்படும்

15. ஏடு தொடக்க உகந்த நாள்
1.மகாநவமி 2. இராமநவமி 3. சித்திரை அட்டமி 4.விஜயதசமி

16. சதசத்து என்று கூறப்படுவது
1. ஆணவம் 2. கன்மம் 3. பதி 4. பசு

17. உயிரானது முற்பிறப்பிலே செய்த வினைகளில் இப்பிறப்பில் அனுபவிக்கின்ற பகுதிக்கு வழங்கும் பெயர்
1.தொகைவினை 2 ஆகாமியம் 3.சஞ்சிதம் 4.பிரார்த்தம்

18. சிவஞான போதத்திற்கு வழி நூலாக அமைந்தது
1. திருவருட்பயன் 2. உண்மை விளக்கம்
3. சிவஞான சித்தியார் 4. திருக்களிற்றுப்படியார்

19. தொண்டர் தம் பெருமையை வலியுறுத்தும் நூல்
1.பெரியபுராணம் 2.சிவபுராணம் 3.திருவிளையாடற்புராணம் 4. விநாயக புராணம்

20. ஆகமப் பொருளை தமிழிலே தருகின்ற முதன்நூல்
1.திருவாசகம் 2. திருமந்திரம் 3. சிவஞான போதம் 4சிவஞான சித்தியார்

21. சங்ககால முல்லை நில மக்களின் வழிபாட்டுத் தெய்வம்.
1.முருகன் 2. மாயோன். 3. கொற்றவை. 4. வருணன்.

22. சகலாகம பண்டிதர் என்ற சிறப்புப் பெயர் பெற்றவர்
1. மெய்கண்ட தேவர் 3. மறைஞானசம்பந்தர்.
2. அருணந்திசிவாச்சாரியார். 4. உமாபதி சிவாச்சாரியார்

23. பிற்பிறப்புக்களில் அனுபவிப்பதன் பொருட்டு எஞ்சியிருக்கும் பழவினையின் பெயர்.
1. பிரார்த்தம். 2. சஞ்சிதம். 3. ஆகாமியம். 4. பற்றற்ற வினை.

24. கொழும்புத்துறை சிவயோக சுவாமிகள் அடியாரின் நன்மை கருதி ஆரம்பித்த இதழ்.
1. ஆத்மஜோதி. 2.சிவதொண்டன். 3. இந்து சாதனம். 4.ஞானபூமி.

25. திருவருட்பயனென்னும் சாத்திர நூலில் திருவருளே உருவெடுத்து வரும் ஞான குரவரது இயல்பு கூறுவது.
1. பதிமுது நிலை. 2. உயரவை நிலை. 3. அருளது நிலை. 4.அருளருநிலை

26. பணிந்து நடத்தல், இன்சொல் பேசுதல் என்பன.
1. ஒருவரின் ஆற்றாமையை வெளிப்படுத்துகின்றன.
2. ஒருவரின் பலவீனத்தின் அறிகுறி.
3. ஒருவர் வாழ்க்கையில் உயர் நிலைக்கு ஏதுவாகின்றன.
4. ஒருவர் வாழ்க்கையில் ஏமாளியாகின்றன.

27. சைவத்தின் பொது நூலாகவும்.சிறப்பு நூலாகவும் கொள்ளப்படுவன.
1. சிலப்பதிகாரம், மணிமேகலை 2. திருக்குறள், பகவத் கீதை
3. வேதம், ஆகமம். 4. பெரிய புராணம், கந்தபுராணம்.

28. இந்தியாவில் இருந்து வந்து இலங்கையிலே கிழக்கு மாகாணத்தில் காரைதீவு என்னும் ஊரில் வாழ்ந்து சமாதியான ஞானி.
1. நவநாதசித்தர். 2. கடையிற்சுவாமிகள்.
3. பெரியானைக்குட்டி சுவாமிகள் 4. சிந்தானைக்குட்டி சுவாமிகள்.

29. தம்பிரான் தோழர் எனப்படுபவர்.
1. அப்பர் 2.சம்பந்தர். 3. சுந்தரர். 4. மாணிக்கவாசகர்.

30. 'தேரடியில் தேசியனைக் கண்டு தரிசித்தேன்' என்னும் பாடலடியில் தேசியன் எனப்படுபவன்.
1. யோகர்சுவாமிகள். 2. கடையிற்சுவாமிகள்.
3. செல்லப்பாசுவாமிகள். 4. நவநாதசித்தர்.

31. அரிகர வடிவம் என்னும் மூர்த்தம்.
1. வைணவத்தையும் சைவத்தையும் இணைக்கும் அம்சம்.
2. வைணவத்தையும் சாத்தத்தையும் இணைக்கும் அம்சம்.
3. சைவத்தையும் சாத்தத்தையும் இணைக்கும் அம்சம்.
4. காணபத்தியத்தையும் கௌமாரத்தையும் இணைக்கும் அம்சம்.

32. கந்தரலங்காரத்தின் ஆசிரியர்.
1. குமரகுருபர சுவாமிகள். 2. தாயுமானவர். 3. அருணகிரிநாதர். 4. கச்சியப்பர்.

33. தமிழ் மூவாயிரம் என்னும் சிறப்புப் பெயரினால் அழைக்கப்படுவது.
1. திருமந்திரம். 2. திருவாசகம். 3. கந்தபுராணம். 4. திருக்குறள்.

34. ஒன்பதாம் திருமுறையில் அடங்குவன.
1. தேவாரம், பெரிய புராணம். 2. திருவாசகம், திருக்கோவையார்.
3. திருவிசைப்பா திருப்பல்லாண்டு. 4. தேவாரம், திருமந்திரம்.

35. நாம் மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்கு சைவம் காட்டும் இலகுவான மிகச் சிறந்த வழி.
1. அறிவு வழி. 2. யோக வழி. 3. அன்பு வழி. 4. போகவழி.

36. திருவுருவ அமைப்புப் பற்றிக் கூறும் நூல்.
1. வேதம், ஆகமம். 2. புராணம், ஸ்மிருதி.
3. திருமுறைகள், காமிகம். 4. காமிகம் முதல் வாதுளம்வரை

37. பரமனை மதித்திடாப் பங்கையாசனன், இதில் பங்கையாசனன் யார்?
1. விஷ்ணு. 2. வைரவர். 3. பிரமன். 4. மகேஸ்வரன்.

38. முருகனின் வேல் எதுவாகக் கொள்ளப்படுகின்றது.
1. இச்சாசக்தி. 2. கிரியாசக்தி. 3. ஞானசக்தி. 4. தத்துவநிதி.

39. ஆலயத்தில் வீண் வார்த்தை பேசுதல், ஓடிவிளையாடுதல், விக்கிரகங்களைத் தொடுதல் என்பன.
1. சமூக உறவை வளர்க்கின்றன.
2. ஆலயத்திற்கு வருவோர் தொகையை அதிகரிக்கச் செய்கின்றன.
3. விலக்கப்பட வேண்டியவை.
4. தவிர்க்க முடியாதவை.

40. திருக்கைலாச பரம்பரைச் சந்தான குரவருள் ஒருவர்.
1. மாணிக்கவாசக சுவாமிகள். 2. மறைஞான சம்பந்தர்.
3. திருஞான சம்பந்த நாயனார். 4. சுந்தரர்.

## பகுதி II

**ஏழாம் வினா உட்பட எல்லாமாக 5 வினாக்களுக்கு விடை தருக**

1) 'இந்து சமயத்தின் முதன் நூல் வேதம் என்பர்'
அ.வேதம் என்பதன் பொருள் யாது?
ஆ.இருக்கு வேதகால சமய நிலையைச் சுருக்கமாகத் தருக?
இ.இருக்கு வேதம் கூறும் தெய்வங்களை வகைப்படுத்துக?
ஈ.யசுர் வேதம் எவை பற்றிக் குறிப்பிடுகின்றன.

2) 'ஆத்தாளை எங்கள் அபிராமி வல்லியை அண்டமெல்லாம்'- அபிராமி அந்தாதி
அ.இலங்கையில் சிறப்படைந்திருக்கும் அம்பாள் ஆலயங்கள் நான்கின் பெயர்களைத் தருக
ஆ.அவற்றில் ஒன்றினது வரலாற்றுச் சிறப்புக்களைத் தருக.
இ.நீர் மேலே குறிப்பிட்ட அம்பாள் ஆலயங்களின் தீர்த்தம், மகோற்சவம் பற்றிக் குறிப்பிடுக

3) 'சைவ சித்தாந்தத்தின் முதல் நூல் சிவஞான போதம்'
அ.சிவாஞான போதத்தின் ஆசிரியர் யார்?
ஆ.கொடிக்கவி பாடப்பட்ட சந்தர்ப்பம் யாது?
இ.அகச் சந்தான குரவர்கள் யார்?

4) 'திருவாசகத்துக்கு உருகாதோர் ஒருவாசகத்திற்கும் உருகார்'
அ.திருவாசகம் பாடியவர் யார் என்பதையும்,
திருவாசகத்தில் உள்ள மொத்தப் பாடல்களையும் தருக.
ஆ.திருவாசகத்தின் சிறப்புப் பற்றி யாது கூறுவீர்?
இ.நீத்தல் விண்ணப்பம் உணர்த்தும் உண்மையென்ன?

5) 'எல்லாம் செப்படி வித்தை அப்படியே உள்ளது ஒரு பொல்லாப்பும் இல்லை'
-நற்சிந்தனை
அ.மேலே குறிப்பிடப்பட்டது யாருடைய வாக்கியமாகும்?
ஆ.இவர் நிட்டை கூடியிருந்த இடம் எது?
இ.ஈழத்துச் சித்தர் ஐவரின் பெயர்களையும்.
அவர்களின் குரு பூசைத் தினத்தையும் தருக?

6) 'சைவ சமயத்தில் பிறந்தவர் யாவரும் தூய ஒழுக்கங்களைக் கடைப்பிடிப்பதற்கு தீட்சை பெற்றுக் கொள்ள வேண்டும்'
அ.தீட்சை என்னும் சொல்லுணர்த்தும் பொருள்யாது?
ஆ.மும்மலங்களும் உள்ள சகலர்க்கும் அளிக்கும் தீட்சை எத்தகையது? அது எவ்வாறு அளிக்கப்பட்டுள்ளது?
இ.சமய தீட்சை பெற்றவர்கள் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய இயம, நியமங்கள் எவை?

7)
1.பின்வரும் பாடல்களில் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக
2.அவற்றைப் பாடியோர் யாரென்பதையும்
அவை எச்சந்தர்ப்பத்தில் பாடப்பட்டதென்பதையும் கூறுக?
3. அவற்றின் பொழிப்பையும் தருக?
அ. 'என்ன புண்ணியஞ்...'
ஆ. 'மண்ணில் நல்ல வண்ணம்...'
இ. 'தனந்தருங் கல்வி...'
ஈ. 'கோலமால்வரை...'
உ. 'சுருதி வான ...'

8) 'நல்லொழுக்கமல்லது அல்லற்படுத்தும்- ஆன்றோர் வாக்கு
1. மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு சைவ நெறி காட்டும் இரண்டு வழி முறைகள் எவை?
2. சைவ ஆலயங்கள் சமய சமூக விழுமியங்களை மக்களிடையே வளர்க்க எவ்வாறு உதவலாம் என்பதைச் சுருக்கமாகத் தருக.
3. பிள்ளைகளின் சமய, சமூகப் பண்பு வளர்ச்சிக்கு குடும்பமே பெரும்பங்கு ஏற்க வேண்டும் - விளக்குக.

தேரான் தெளிவும் தெளிந்தான் கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்
-குறள்-

# வலம்புரி

## படைத்தரப்பின் மறுப்பு

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஒரு சில பத்திரிகைகள் படையினருக்கு எதிரான செய்திகளைப் பிரசுரித்து மக்களுக்கும் படையினருக்குமிடையிலான நல்லுறவில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இதனால் படையினர் மீது மக்கள் பகைமை கொண்டுள்ளனர் என யாழ்.குடாநாட்டுத் தளபதி சரத் பொன்சேகா குற்றஞ் சாட்டியிருந்தார்.

படைத்தளபதியின் குற்றச்சாட்டு, ஓர் சாதாரண நிகழ்வில் வைத்துத் தெரிவிக்கப்பட்டதல்ல. பத்திரிகையாளர் படையினரால் தாக்கப்பட்ட சம்பவங்கள் குறித்து கண்காணப்புக்குழு-யாழ்.படைத்தளபதி- பத்திரிகையாளர்கள் ஆகியமுத்தரப்புச் சந்திப்பின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் .குடாநாட்டுத் தளபதி சரத் பொன்சேகாவின் கருத்து உண்மைக்குப் புறம்பானது என்பதை மறுதலிப்பதற்கும், அதற்கான ஆதாரங்களை முன்வைப்பதற்கும், யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் குறிப்பிட்ட பத்திரிகையால் முடியுமெனினும், பொருத்த மற்ற குற்றச்சாட்டுக்கள் பற்றி அக்கறை கொள்ளாமல் இருப்பது, குற்றச்சாட்டை முன்வைத்தவர்களை சிந்திக்க வைக்கும் என்பதால் அது பற்றி அலட்டிக் கொள்ளாமல் விட்டு விடலாம்.

ஆனால் இராணுவத்திற்கு எதிராக தகவல்களை வெளியிட்டு, மக்களுக்கும், இராணுவத்திற்குமிடையிலான உறவில் விரிசலை குறிப்பிட்ட பத்திரிகை ஏற்படுத்துவதால் அதற்காகவே பத்திரிகையாளர் தாக்கப்பட்டதாக யாழ்.தளபதியின் கருத்து தொனிக்கிறது. இதனைக் கூட பேசாமல் விட்டு விடலாமெனில், இராணுவம் பற்றிய ஒவ்வொரு செய்திக்கும் பலாலி படைத்தலைமையகம் மறுப்புத் தெரிவித்து கடிதம் அனுப்புவது, அரியாலை, மாம்பழம் சந்தியில் இடம் பெற்ற பத்திரிகையாளர் மீதான தாக்குதலுக்குப் பின்னர் அதிகரித்துள்ளது. செய்திகளின் உண்மைத் தன்மையை உணர்ந்து கொள்ளாமல், இராணுவத் தரப்பு செய்தியெனில் அது மறுக்கப்பட வேண்டும் என்பது போல பலாலி படைத் தலைமையகம் செயற்படுவது விசனத்திற்குரியது.

இராணுவம் சம்பந்தப்பட்ட செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை எனில் அவை பற்றிய ஓர் விரிவான விளக்கத்தை படைத் தலைமையகம தெரியப்படுத்த வேண்டும்.

அதைவிடுத்து வெறுமனே செய்திகளை மறுப்பது மக்களுடனான படையினரின் உறவைப் பத்திரிகை பாதிக்கின்றது என மொட்டையாக குற்றஞ்சாட்டுவது, இவையல்லாம் பொறுப்பான செயலாக அமையாது என்பதை படைத் தலைமையகம் உணர்ந்து கொள்ள வேண்டும். செய்திகளை மறுப்பதும் அவற்றிற்கு பத்திரிகை விளக்கம் எழுதுவதும் இன்றைய சமாதான சூழ்நிலை யில் நல்லதல்ல என பிரஸ்தாப பத்திரிகை உணர்வதை படைத் தரப்பு புரிந்து கொள்ள வேண்டும்.

# சர்வரோக நிவாரணியாகத் திகழும் நெல்லிக் கனியின் பயன்பாடுகள்

ஒருவருடைய தேக ஆரோக்கியத்திற்கு மூலகாரணமாக விளங்குவது அவரது உடம்பில் ஓடும் சுத்தமான இரத்தம் தான். இரத்தம் கெட்டுவிட்டால் உடல்வலிமை குன்றுவதுடன், நோய்கட்கும் ஆளாக நேரிடுகின்றது. உடம்பில் ஓடும் இரத்தம் சுத்தமாக இருக்கவும், உடல் ஆரோக்கிமாக இருக்கவும் எம் மூதாதையர்கள் சர்வரோக நிவாரணிகளாகப் பல கனிவகைகளையும், கீரைவகைகளையும், இலை வகைகளையும், கிழங்குவகைகள் தண்டு, வேர்வகைகளையும் இனங்கண்டு அவற்றை அன்றாடம் உணவிற் சேர்த்துவந்தனர்.

பல்லாயிரம் வருடங்கட்கு முன்பே தமிழ் ஆயுர்வேத சாஸ்திரத்தில நெல்லிக்கனியின் தனிப் பெருமையாக அது நீண்ட ஆயுளையும், எல்லா வியாதிகளையும் தீர்க்கும் வல்லமையையும், சரீர அவயங்கட்குப் புத்தூக்கம் கொடுக்கும் சிறப்பையும், மிகமிகக் கொண்டதாக ஆய்வுகள் மூலமும், அனுபவமூலம் எடுத்துக்கூறியுள்ளார்கள்.

தேக ஆரோக்கியத்திற்குத் தேவையான இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, கசப்பு, உவர்ப்பு ஆகிய ஐவகைச் சுவைகளும் நெல்லிக்கனியிற் காணப படுகின்றன.

மேலும் நெல்லிக்கனியில் விற்றமின் ஏ,பி,சி மூன்றும் சேர்ந்திருப்பதும் இக்கனிவாடினாலும் சத்துக்கள் கொடாமல் இருப்பதும் எப்போதும் இதனை பாவிப்பதற்கு வாய்பாக உள்ளது. நெல்லிக்கனியைப் பச்சையாகவோ, வற்றலாகவோ, ஊறுகாயாகவோ சம்பல், வதக்கல், வறுவலாகவோ உண்ணலாம்.

### மருத்துவ விளக்கம்

நெல்லிக்கனி குழந்தைகளின் பற்களுக்கு உறுதிசேர்ப்பதாகவும், பயோரியா வியாதிக்குக் குணம தர வல்லதாகவும், கர்ப்பிணித் தாய்மாருக்கு ஞாபகசக்தியையும், கண்பார்வையையும் கூர்மைப்படுத்தவல்லதாயும இருப்பதனை வைத்திய ஆயவுகளும, எம் முன்னோரின் அனுபவங்களும் எடுத்துக்கூறியுள்ளன.

ஆதிசங்கரர் ஏழைப் பெண் நெல்லிக்கனி கொடுத்த போது அதை அன்போடு வாங்கிக் கனக தாரா தோத்திரம் படித்து அப்பெண்ணை இலட்சுமி கடாட்சம் பெற வைத்தமையும், ஔவைப்பாட்டி அதிகமானைப் புகழ்ந்து அவனுக்கு நெல்லிக்கனி கொடுத்து நீண்ட ஆயுளுடன் வாழ வாழ்த்தியமையும் எம்முன்னோர் நெல்லிக்கனியின் சிறப்பைப பல ஆயிரம் வருடங்கட்கு முன்பே தெரிந்திருந்தமை நன்குணரமுடிகின்றது.

தேக ஆரோக்கியத்தைத் தர வல்லதான நெல்லிக்கனி, புத்திக கூர்மையையும், சகல ரோக நிவாரணத்தையும் தரும் ஒரு உயர்ந்த ஔடதமாக விளங்குவதனால் நெல்லிக்கனி கிடைககும்போது அதனை உணவிற் சேர்த்துக் கொள்வதுடன், என்றும் வருடமுழுவதும் பாவனைக்கு வேண்டிய படி வற்றலாகவோ ஊறுகாயாகவோ சேமித்து வைத்துப் பயன்படுத்துவது எப்பொழுதும் உடல் ரோக்கியத்துடன் வாழ உதவிடும் சர்வரோக நிவாரணியாகப் பயன்படுமன்றோ!

நெல்லிக்கனியின் சிறப்பைக் கூறவந்த ஒரு பெரியார், நெல்லிக் கனி கொடுத்தார்க்கும் ஆயுள் பலம் நெல்லிக்கனி வாங்கி உண்டார்க்

நீர்வை மணி

கும் ஆயுள் பலம் எனப் பெருமைப் படக் கூறியிருப்பது நெல்லிக்கனியின் தனிச்சிறப்பை நாம் நன்கு உணரவைப்பதாயுள்ளது.

அன்றியும் நெல்லி மரம் ஆலயங்களில் தலவிருட்சமாவும், நெல்லி இலை இறைவழிபாட்டிற்கு உகந்த அர்ச்சனைச் பொருளாகவும் பயன்படுவதும் நெல்லியின் தனித்துவத்தை அடுத்துக் காட்டுகின்றது.

* * *

# அமைதிக்குச் சவால் விடுக்கும் சக்திகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## படையினர், புலிகள் சந்திப்பில் முடிவு

(லண்டன்)

கிண்ணியாப் பகுதியில் மாட்டு வண்டி கடத்தப்பட்ட சம்பவத்திற்கும் எமது தரப்பிற்கும் எந்தவொரு தொடர்புமில்லை எனவும் சமாதானத்தை விரும்பாத, தமிழ்-முஸ்லிம் சமூகத்தின் நல்லுறவை விரும்பாத சில தீய சக்திகளே இத்தகைய செயலில் ஈடுபட்டிருக்கலாம் என்றும் தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் மீண்டும் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை கிண்ணியாப் பகுதியில் அண்மையில் முஸ்லிம் விவசாயிகளின் மாட்டுவண்டில் கடத்தப்பட்டதைத் தொடர்ந்து அங்கு இடம் பெற்று வரும் வன்முறைச் சம்பவங்கள் குறித்து ஆராய்ந்து நிலைமையை சுமுகமாக்கும் வகையில் நேற்று முன்தினம் அரசஅதிகாரிகள், தமிழீழ விடுதலைப்புலிகள், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர், இராணுவம் மற்றும் பொலிஸ் அதிகாரிகள், முஸ்லிம் பிரதிநிதிகள் ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற சந்திப்புக் குறித்து கருத்துக் கூறுகையிலேயே திலக் இதனைத் தெரிவித்தார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்-முஸ்லிம் உறவுகள் மேம்படவேண்டும் அதனை வலுப்பெறச் செய்ய வேண்டும் என்பதற்காக நாம் பெரும் அர்ப்பணிப்புடனும் விட்டுக்கொடுப்புடனும் நடந்து கொணடிருக்கின்ற இந்நிலையில், இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெற்றுவருவது எமக்கு அதிருப்தியை ஏற்படுத்துகின்றது.

இதனை நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் முஸ்லிம் பிரதிநிதிகளிடம் தெளிவாக விளக்கியுள்ளோம். இதுபோன்ற சம்பவங்கள் இனியும் இடம்பெறாதிருப்பதற்காக சில முடிவுகளையும் எடுத்துள்ளோம்.

சமாதானத்தைக் குழபபும் வகையிலும், இனங்களிடையே வன்முறைகளைத் தூண்டிவிடும் வகையிலும் செயற்பட்டுவரும் இத் தீயசக்திகளை இனங்கண்டு,

எமது கட்டுப்பாட்டுப் பகுதியில் வசிப்பவர்களாயின் அவர்களுக்கு எதிராக நாம் கடும் நடவடிக்கை எடுப்பதென்றும், இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் வசிப்பவர்களாக இருந்தால் இராணுவம் அல்லது பொலிஸார் இதுகுறித்து கடும் நடவடிக்கை எடுப்பது என்றும் முடிவெடுதததுள்ளோம்.

அத்துடன், தொடர்ச்சியாக முஸலிம் பிரதிநிதிகளுடன் சந்திப்புக்களை நடத்தி இத்தகைய பிரச்சினைகள் உருவாகும் சந்தர்ப்பங்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதெனவும் முடிவெடுத்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

(உ-62-10)

## நல்லூரில் குடிநீர் திட்டம்

(கந்தர்மடம்)

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிதி அனுசரணையுடனும் நல்லூர் சங்கிலியன் தோப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஒத்துழைப்புடனும் நல்லூர்ப் பகுதியின் சில இடங்களுக்கு குடிநீர் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் தூரிதகதியல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

6 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா செலவில் மேற்கொள்ளப்படும் இக் குடிநீர் விநியோகத் திட்டத்தின் மூலம் நல்லூர் மூத்த விநாயகர் வீதி, கடுக்காயடிவீதி, கன்னாரவீதி, நாயன்மார்கட்டுவீதி மற்றும் செம் மணி வீதி ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகப்படவுள்ளது. (உ-112)

# வடக்கு-கிழக்கு ஐக்கிய மறுமலர்ச்சி மன்றம் அங்குரார்ப்பணம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வாழும் மூவின மக்களிடையேயும் இனஒற்றுமையை ஏற்படுத்தி சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கென ''வடக்கு-கிழக்கு ஐக்கிய மறுமலர்ச்சி மன்றம்'' என்ற பெயரில் அரச சார்பற்ற அமைப்பு ஒன்று நேற்று முன்தினம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் மயோன் முஸ்தபாவைத் தலைவராகக் கொண்டு இந்த அமைப்புச் செயற்படவுள்ளது.

வேலையில்லாப் பிரச்சினைக்கு தீர்வுகாணுதல், உயர் கல்வி வாய்ப்பை இழந்த இளம் சந்ததியினருக்கு நிவாரணம் பெற்றுக் கொடுத்தல், பிராந்திய மக்களின் அடிப்படைத் தேவைகளை இனங்காணல் அவற்றின் தீர்வுக்கு முன்னுரிமை வழங்கல் பிராந்தியத்தில் செயல்படும் சிவில் அமைப்புக்களைப் பலப்படுத்தல் ஆகியன இநத அமைப்பின் நோக்கங்களாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.(தி-60,10)

# நேபாளப் பத்திரிகையாளர்கள் டிசம்பர் மாதம் யாழ்.வருவர்

(திருநெல்வேலி)

இம்மாதம் இறுதிப் பகுதியில் இடம்பெறவிருந்த நேபாள சுயாதீனப் பத்திரிகையாளர் குழுவின் இலங்கை வருகை ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

இம்மாதம் 31ஆம் திகதி, இடைக்காலத் திட்டவரைபு தொடர்பான விடுதலைப்புலிகளின் மாற்று யோசனை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், அனைதது்ப் பத்திரிகையாளர்களின் பார்வையும் இதுவிடயத்தில் குவிந்திருக்கும் என்பதால் பத்திரிகையாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடும் தமது முக்கிய குறிககோள் நிறைவேறாது என்ற காரணத்தினாலேயே இவ் விஜயம் ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, எதிர்வரும் டிசம்பர் மாதம் இலங்கை வாரத் திட்டமிட்டுள்ள மேற்படி நேபாள சுயாதீனப் பத்திரிகையாளர் குழு, யாழ்.குடாநாட்டுப் பத்திரிகையாளர்களைச் சந்தித்து இங்குள்ள நிலைமைகள் தொடர்பாகக் கேட்டறியவிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-43)

## ஆலயம் புனரமைப்பு

(கந்தரோடை)

உடுவில் கற்பக்குணைப் பிள்ளையார் ஆலயத்தின் புனரமைப்புப் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றது.

மேற்படி ஆலயம் புனரமைப்பிற்குத் தேவையான நிதியினை உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் வசிக்கும் அப்பகுதி மக்கள் வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(உ-103)

ௐ

## தினசரி தியானம்

### சிந்தனைக் கட்டுப்பாடு

உங்களது தேவைகளையும் ஆசைகளையும் குறைத்துக் கொள்ளுங்கள். சிறிது சிறிதாக அவை பூண்டோடு அழிந்து விடும். எண்ணங்கள் அல்லது சிந்தனைகள் கடலின் அலைகளைப் போன்றவை. எண்ணில் அடங்காதவை. ஆரம்பத்தில் நீங்கள் நிராசையடையலாம். சில எண்ணங்கள் அடங்கிப் போகலாம். வேறு சில நீரோட்டம் போலப் பாய்ந்து வரலாம். பயிற்சி நிலையில் இருக்கும் போது நீங்கள் தளர்ந்துவிடாதீர்கள். முடிவில் வெற்றி பெறுவீர்கள்.

சுவாமி சிவானந்தர்

# இடைக்கால நிர்வாகத்தை நிராகரித்தால் சிங்கள தேசம் பேரிழப்பைச் சந்திக்கும்

## சிவாஜிலிங்கம் எம். பி. எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஆட்சிமாறினால் என்ன, பாரா ளுமன்றம் கலைக்கப்பட்டால் என்ன அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட வுள்ள இடைக்கால நிர்வாகசபைத் திட்ட வரைபு நிராகரிக்கப்படுமா னால் சிங்கள தேசம் பேரிழப்பைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப் பினர் கே.சிவாஜிலிங்கம் எச்சரித்தார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத் திற்கு வருகை தந்த பாராளுமன்ற விவகார அலுவல்கள் அமைச்சர் அஸ்வர் தலைமையிலான குழுவினரை யாழ் செயலகத்தில் வரவேற்று உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு எச்சரித்தார்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி 19 மாதங்கள் கடந் துள்ள நிலையில் வடக்குக் கிழக் குப் பகுதியில் இன்னமும் இயல்பு நிலை திரும்பவில்லை.

உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் ஒரு சில மீற்றர் களைக் கூட தானும் விட்டுக் கொடுப்பதற்குப் படைத்தரப்பு தயாராகவில்லை.

புரிந்துணர்வு உடன்படிக் கையில் ஒரு சில மாதங்களில் உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படுமென விதந்துரைக்கப் பட்டுள்ள போதும் இது வரை அது நடைபெறவில்லை.

மாறாக பொதுமக்கள் மீது படைத்தரப்பினர் தாக்குதல்களை மேற்கொள்வதும் பழி தீர்க்கும் நடவ டிக்கையில் ஈடுபட்டு வருவதும் சாதாரண நிகழ்வாகி விட்டது..

இத்தகைய விரும்பத்தகாத நிகழ்வுகளுக்கு முடிவுகட்ட இடைக் கால நிர்வாகம் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க வேண்டு மென்றார். (த-4)

# லண்டனில் கொலைக் குற்றம் அரியாலைவாசிக்கு ஆயுட் தண்டனை

(லண்டன்)

லண்டன் வெம்பிளி நகரில் கொலை, ஆள்கடத்தல் சித்திரவதை போன்ற குற்றச்செயல்களை நிகழ்த்தியதின் பேரில் மேலும் இரு இலங்கையருக்கு ஆயுட் தண்ட னையும், சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஏப்ரலில் இரு தமிழர்கள் கொலைசெய்யப்பட்ட மைக்காக ஏற்கனவே மூவருக்கு மொத்தம் 32 ஆண்டுகாலம் சிறைத்தண்டனை வழங்கப்பட் டுள்ளது. லண்டனில் தமிழ் சமூகத் தவரிடையே தொடர்ச்சியாக நடை பெற்று வரும் கொலைகள், வேறு பல குற்றச்செயல்களை விசாரணை செய்யவென சில மாதங்களுக்கு முன் ஸ்கொட்லண்ட்யாட் பொலிசார் தனியொரு குழுவை நியமித் திருந்தனர்.

மேற்படி கொலை செய்யப்பட்ட மன்னாரைச் சேர்ந்த பிரதீபன் பரமலிங்கம் என்பவரின் வீட்டிற்குச் சென்ற அரியாலையைச் சேர்ந்த இராகுலபபெருமாள் சச்சிதானந்தன் என்பவர், வீட்டில் பிரதீபன் இல்லாததால் அங்கு தங்கியிருந்த சுரேஸ் செல்வராசா என்பவரை துப்பாக்கியால் தாக்கியதுடன் துப்பாக்கிப் பிரயோகம் செய்து குழப்பம் விளைவித்ததாகவும் இவரே பின்னர் பிரதீபனைக் கொலை செய்ததாகவும் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட லண்டன் நீதிமன்றம் சச்சிதானந் தத்திற்கு ஆயுட் தண்டனையையும். கொலைக்கு உடந்தையா ளரான நாகராசா சிவகுமார் என்பவருக்கு 12 வருட சிறைத் தண்டனையும் விதித்துள்ளது.

2001ம் ஆண்டு அரியாலை வாசி ஒருவர் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பிரதீபன் என்பவரை லண்டன் பொலிஸார் கைது செய்திருந்த போதிலும் குற்றமற்றவரென நீதிமன்றம் விடுதலை செய்திருந்ததும் இச் சம்பவத்தோடு தொடர்புபட்ட தாகவே பிரதீபனின் கொலை இடம்பெற்றதாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (த-6)

# பிரபாவை கைது செய்யாதது ஏன் விளக்கம் கோருகிறது நீதிமன்றம்

(கொழும்பு)

கொழும்பு மத்திய வங்கி குண்டு வெடிப்புத் தொடர்பாக 200 வருடங் கள் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டுள்ள விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை கைது செய்யுமாறு பிறப்பிக்கப்பட்ட பிடி யாணையை நடைமுறைப்படுத் தாமைக்குரிய காரணங்களைத் தெளிவுபடுத்துமாறு மேன்முறை யீட்டு நீதிமன்றம் நேற்று குற்றப் புலனாய்வுப் பணிப்பாளருக்கு உத் தரவிட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய விடுதலைப் புலிகளின் தலைவரை இதுவரை குற்றப்புலனாய்வுத்திணைக்களம் ஏன் கைதுசெய்யவில்லை என்று தாக்கல் செய்யப்பட்ட இரண்டு மனுக்களை ஆராய்ந்த பின்னரே இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட் டுள்ளது.

இந்த இரண்டு மனுக்களிலும் குற்றப்புலனாய்வுத் திணைக்களப் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசாமெண்டிஸ் உட் பட மூவர் பிரதிவாதிகளாகக் குறிப் பிடப்பட்டுள்ளனர்.

மத்திய வங்கி குண்டு வெடிப்பு தொடர்பாக 712 குற்றச்சாட் டுகளில் 52 குற்றச்சாட்டுகளில் விடுதலைப் புலிகளின் தலைவர் குற்றவா ளியாக காணப்பட்டுள்ள போதும் அவரைக் கைது செய்து அவருக்குரிய 200 வருடகால. சிறைத் தண்டனையை அமுல் படுத்த குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வில்லை என்றும் இது தொடர்பாக டிசம்பர் மாதம் முதலாம் திகதி நீதி மன்றத்தில் ஆஜராகி இதற்குரிய காரணங் களைத் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் மனுவில் குறிப்பிட்டுள்ள மூவருக்கும் உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. -(6)

# கூட்டணிக்குள் ஒற்றுமை வேண்டிப் பிரார்த்தனை

(திருநெல்வேலி)

தமிழர் விடுதலைக் கூட்டணிக் கட்சிக்குள் ஒற்றுமை வேண்டி அமைதிப் பிரார்த்தனையும் கருத்தரங்கும் எதிர்வரும் 2ம் திகதி யாழ்.ஸ்ரான்லி வீதியில் அமைந் துள்ள கூட்டணியின் அலுவல கத்தில் இடம்பெறவுள்ளது. அன்று காலை 9மணிக்கு கட்சியின் அலுவலகத்தில் உள்ள தந்தை செல்வாவின் சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்திய பின்பு கட்சியின் ஒற்றுமை வேண்டி ஒருமணி நேர அமைதிப் பிரார்த் தனை இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து 'இன்றைய அரசியற் சூழ்நிலையும்தமிழர் விடுதலைக் கூட்டணியின் எதிர்காலச் செயற் பாடும்' என்ற கருப்பொருளில் கட்சியின் ஆரம்பகால உறுப்பின ரும் முன்னாள் உடுவில் கிராம சபைத் தலைவருமான சி.முத்துலிங் கத்தின் தலைமையில் கருத்தரங்கும இடம்பெறவுள்ளது.(ந-43)

## பிணையில் செல்ல அனுமதிக்குக

(கொழும்பு)

குடிவரவு-குடியகல்வு திணைக் களத்தின் சட்டங்களை மீறினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் விளக் கமறியலில் வைக்கப்பட்டுள்ள 12 பேர் தங்களைப் பிணையில் செல்ல அனுமதிக்குமாறு கோரி மேன் முறையிட்டு நீதிமன்றில் விண்ணப் பங்களைச் சமர்பித்துள்ளனர்.

கட்டு நாயக்கா விமான நிலை யம் மூலம் சட்டவிரோதமாக வெளி நாடு செல்ல முயன்ற சமயம் குடிவரவு-குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட் டுள்ள இவர்கள் நீர் கொழும்புச் சிறைச்சாலையில் பலமாதங்களாக தாம் தடுத்து வைக்கப்பட்டுள் ளதாகவும் நீதிவான் நீதிமன்றில் தங்களைப் பிணையில் செல்ல அனுமதி வழங்காதமையினால் மேன்முறையீட்டு நீதிமன்றில் முறைப்பாடு செய்வதாகவும் தமது மனுவில் தெரிவித்துள்ளார்கள்


(உ-60,10)

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் நேற்றும் நேற்றுமுன்தினமும் இடம் பெற்ற தொடர் குண்டுத் தாக்கு தலில் இடிந்த நிலையில் உள்ள செஞ்சிலுவைச் சங்கக் கட்டடத் தைப் படத்தில் காணலாம்.

(செய்தி 4ம் பக்கத்தில்)

மிகவிரைவில் எதிர்பாருங்கள்
உங்கள் வலம்புரியில்
ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர்
செங்கை ஆழியான்
எழுதும்
மகாவம்சம்
தொடர்
வாசிக்கத் தவறாதீர்கள்





திருகோணமலை மூதூரில் இனம் தெரியாதோரின் வாள் [illegible] இலக்காகி படுகாயமடைந்த தமிழர் இருவர் [illegible] வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படுவதை [illegible]

## இந்து கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட ஹொக்கி அணி இன்று கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்)

47வது தேசிய ஹொக்கி சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ளும் பொருட்டு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட ஹொக்கி அணி இன்று கொழும் புக்குச் செல்கிறது.

கொழும்புக்குச் செல்லும் ஹொக்கி அணி வீரர்களின் விபரம் வருமாறு;

சீ.ஏ.அரவிந்தன்(அணித்தலைவர்), ஏ.பவானந்தி, வி.டபிள்யூ.ஜெய நேசன், பி.தர்மகுமாரன், எம். சயந்த ரூபன், கே.உமாகஜன், எம், வினோ காந்தன், எஸ்.சிவதீஸ், ஜீ.குமரன், எஸ்.எம்.ஜெயரஞ்சன், எஸ்.செல்வச் சந்திரன், வீ.காந்தரூபன், எஸ்.சசி கரன், என்.ஜெயதீபன், ஆர்.ஷாஜ கான், எஸ்.இந்திரதாஸ், எஸ்.மகீரன், ரீ.ராஜசிறிகாந்தன். (த)

# மூதூர்ப் பகுதியில் அமைதி நிலவுகிறது

(திருகோணமலை)

திருகோணமலை மூதூர்ப் பிரதேசத்தில் தற்போது பூரண அமைதி நிலவுவதாக கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் நெவில் விஜயசிங்கா தெரிவித்துள்ளார்.

மூதூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள பூரண அமைதியைத் தொடர்ந்து அங்கு மேலதிகமான படையினரும் பொலிஸாரும் நிறுத்தப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட் டுள்ளது.

மூதூர் இறங்குதுறையின் பாதுகாப்புக்காக கடற்படையினரின் உதவி பெறப்பட்டுள்ளதாகவும், திருகோணமலை, கந்தளாய் ஆகிய பிரதேசங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நெவில் விஜயசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (வ)

## முஸ்லிம்கள் எழுச்சிப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் இருந்து வெளியேற் றப்பட்ட முஸ்லிம் மக்களின் உரிமைகள் குறித்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை புத்தளம் ரத்மல்யாய திறந்த வெளி அரங்கில் எழுச்சிப் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களுக்கான பிரஜைகள் குழுவி னால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இவ் எழுச்சிப் போராட்டத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல் லைத்தீவு மற்றும் மன்னார் மாவட் டங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு தற்போது புத்தளம் மாவட்டத்தில் வசித்துவரும் முஸ்லிம்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-16)



இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.10.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.